பொதுசன நூலகம்
தாவாந்துறைப் படிப்பகம்
சங்கர சபை, யாழ்ப்பாணம்,

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 28 புதன்கிழமை (12.01.2011) பக்கங்கள் 12 ஓசை – 104

Job! With High Salary Follow

Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.

## எனக்கு அமெரிக்க அரசு மரண தண்டனை விதிக்கக் கூடும்

### விக்கிலீக்ஸ் ஸ்தாபகரின் அச்சம்



(கொழும்பு)

அமெரிக்கா தமக்கு மரண தண்டனை விதிக்கக் கூடும் என விக்கிலீக்ஸ் இணையத்தின் ஸ்தாபகர் ஜூலியன் அசாஞ்சே தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜதந்திர தரவுகளை உலகிற்கு அம்பலப்படுத்தியதனால், தமக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என அவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க தூதுவராலயங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்களினால் வெளியிடப்பட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## சட்டக் கல்லூரி தேர்வில் மோசடி; நாமலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷவுக்கு கடந்த மாதம் இலங்கை சட்டக் கல்லூரியில் நடந்த தேர்வின் போது விசேட சலுகைகள் வழங்கப்பட்டதாகக் கோரி முன்வைக்கப்பட்ட ஒரு புகார் மீதான விசாரணை கொழும்பில் தொடங்கியுள்ளதாக பி.பி.சி தமிழோசை தெரிவித்துள்ளது. இந்தப் புகாரை விசாரிக்க கொழும்பு சட்டக் கல்லூரியால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி உதித இகலஹேவ (11ஆம் பக்கம் பார்க்க)

# இராஜதந்திர சேவையில் மறுசீரமைப்பு!

# அழுத்தங்களை எதிர்கொள்ள தயாராகும் அரசு

(கொழும்பு)

**சர்வதேச ரீதியில் இலங்கையின் நற்பெயரைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், அரசுக்கு எதிராக அண்மைக்காலத்தில் ஏற்பட்டிருக்கும் பல்வேறு அழுத்தங்களைச் சமாளிப்பதற்கும் அரசு சர்வதேச அளவிலான துரித நடவடிக்கைகளில் தீவிரம் காட்டி வருகிறது.**

இதன் முதற்கட்டமாக அரசு தனது இராஜதந்திர சேவைகளை மறுசீரமைக்கும் முயற்சியில் ஈடுபட ஆரம்பித்திருக்கிறது. இதன் ஒரு அங்கமாக வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றும் இராஜதந்திரிகளையும், தூதுவர்களையும் பொருத்தமான முறையில் இடமாற்றுவதற்கும் அரசு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இராஜதந்திர நெருக்கடிகளை வெற்றிகரமாகச் சமாளிக்கும் நோக்கில் வெளிநாடுகளுக்குப் புதிய தூதுவர்களையும் நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் ஒரு கட்டமாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் (11ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் கூட்டு; சேரவிரும்பினால் கட்சியில் உறுப்புரிமை பெறுங்கள்

### ஐ.தே.க. நிபந்தனை போடுகிறது



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமது கட்சியுடன் ஒன்றிணைந்து போட்டியிட விரும்பும் கட்சிகள் மற்றும் குழுக்கள் தமது கட்சியில் உறுப்புரிமை பெற வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது குறித்து கருத்து (11ஆம் பக்கம் பார்க்க)

## மேகங்களால் இலங்கை முற்றுகை; நாடு முழுவதும் குளிர் அதிகம்!

### காரணம் தேடும் வளிமண்டலவியல் திணைக்களம்



(கொழும்பு)

இலங்கையின் பெரும்பாலான பாகங்களில் வழமையை விட குளிரான கால நிலை நிலவுவதாகவும் இதற்கு இந்தியாவில் வீசும் குளிர் அலையொன்று மறைமுகக் காரணமாக இருக்கலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைத்தீவு மேகங்களால் மூடப்பட்டுள்ளமையே குளிரான காலநிலைக்கு பிரதான காரணமாகும். அத்துடன் இந்தியாவின் குளிர் அலையும் இதற்கு மறைமுக காரணமாக இருக்கலாம் என வளிமண்டலவியல் (11ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ள நிவாரணப் பணிகளில் முப்படைகளையும் இணைக்குக!

### அத்தியாவசிய ஆணையாளருக்கு ஜனாதிபதி பணிப்புரை



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் வெள்ளப் பாதிப்புக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை துரிதப்படுத்தி அம்மக்களைப் பாதுகாக்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணித்துள்ளார். பாதிக்கப்பட்ட(11ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளப்பாதிப்புக்குள்ளான மக்களுக்கு உதவி புரிய இந்தியா தயார் நிலையில்!



(கொழும்பு)

தொடர்ந்து பெய்துவரும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்குமாகாண மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்க இந்தியா தயாராக இருப்பதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பில் இலங்கைக்கான இந்திய தூதுவர் அசோக கே.காந்தா உறுதியளித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க இந்தியா முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுமத்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் (11ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் புதிய குடிவரவு விதிகள்; அவற்றை எதிர்த்து நீதிமன்றில் வழக்கு

### இலங்கை திரும்பும் தமிழர்களுக்கு ஆபத்து இல்லை என்பது பொய்

(கனடா)

கனடாவில் அகதி அந்தஸ்து கோரி உள்நுழையும் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கென அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் விதிமுறைகளுக்கு எதிராக அந்த நாட்டு நீதிமன்றம் ஒன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

கனடாவில் அகதி அந்தஸ்து கோருவோருக்கு பாதகமானதொரு புதிய கொள்கையை கனேடிய குடிவரவு மற்றும் கனேடிய அகதிகள் சபை அண்மையில் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், கனடாவிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட தமிழர்களுக்கு அவர்கள் தமிழர் என்பதற்காக உயிராபத்து ஏற்படப்போவதில்லை என அந்தப் புதிய கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேசமயம், இந்த புதிய விதிமுறைகள் அடங்கிய வழிகாட்டலை ஏற்க வேண்டுமென்ற கட்டாயம் அகதிகள் சபை விசாரணையாளர்களுக்கு இல்லை. ஆயினும் தேவைக்கேற்ப ஒரு உறுதியான ஒரு மாதிரியுருவாக இந்த (12ஆம் பக்கம் பார்க்க)

# மாதிரி பாலர் பாடசாலை நல்லூரில் அங்குரார்ப்பணம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்துவைத்தார்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் புதிய மாதிரி பாலர் பாடசாலை நேற்று மங்களகரமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கிலியன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமையப் பெற்றுள்ள இந்தப் பாலர் பாடசாலையின் திறப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த அவர்களும், சிறப்பு விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

சிறார்களின் பாண்ட் அணிவகுப்புடன் பிரதம சிறப்பு விருந்தினர்களும், ஏனைய விருந்தினர்களும் பாடசாலை வளாகத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

வளாகத்தில் தேசியக் கொடியினை பிரதம விருந்தினர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து மாநகர சபைக் கொடியும் பாடசாலைக் கொடியும் ஏற்றி வைக்கப்பட்டன.

பாடசாலைப் பெயர்ப் பலகை அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, திஸ்ஸ கரலியத்த ஆகியோரால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

புதிய மாதிரி பாலர் பாடசாலைக்கான திறப்புக் கோர்வையினை பிரதம சிறப்பு விருந்தினர்களிடமிருந்து யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டு வகுப்பறைகளும் பிரதம சிறப்பு விருந்தினர்களால் திறந்து வைக்கப்பட்டன.

கட்டடத்தில் அமைக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகையினை அமைச்சர்களான திஸ்ஸ கரலியத்த மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்ததுடன், அங்கு அமைக்கப்பட்டிருந்த மலசல கூடங்களையும் அமைச்சர்கள் அடங்கிய குழுவினர் பார்வையிட்டனர்.

வளாகத்தில் சிறப்பாக அமைக்கப்பட்ட அரங்கத்தில் சர்வதேச தலைவர்களின் ஆசியுரைகளைத் தொடர்ந்து யாழ். மாநகர முதல்வர் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில், சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி நாமினி குணசேகரா, ஹேமாஸ் நிறுவன முகாமையாளர் திருமதி சிரோமி மசக்கொரல்ல, மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி, சிறுவர் செயலகப் பணிப்பாளர் திருமதி ஜமுனா பெரேரா உட்பட உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

சிறுவர் செயலகம் மற்றும் ஹேமாஸ் நிறுவனம் இணைந்து இப்புதிய மாதிரி பாலர் பாடசாலையை நிர்மாணித்ததுடன், இப்பாலர் பாடசாலைக்கான அடிக்கல் கடந்த 05.04.2010 அன்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் நாட்டி வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# திருட்டு மோட்டார் சைக்கிள் வீதிவிபத்தில் சிக்கியது

## திருட்டு அம்பலமாகியது

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளை திருடிச்சென்றவர் விபத்தில் படுகாயமடைந்த சம்பவம் ஒன்று கடந்த 7ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

ஐந்து சந்திப் பகுதியில் தொழிலுக்காக சென்ற மேகவானந் என்பவர் தனக்குச் சொந்தமான 49 cc மோட்டார் சைக்கிளை தன் வேலைத் தளத்திற்கு முன்னால் நிறுத்திவிட்டு தொழிலுக்கு சென்று மதியம் வீட்டுக்குச்செல்லுவதற்காக மோட்டார் சைக்கிளை விட்ட இடத்தில் சென்று பார்த்தபோது, அங்கு மோட்டார் சைக்கிள் இல்லாதை கண்டு அதிர்ச்சியடைந்தார் உடனடியாக அவர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் மறுநாள் மோட்டார் சைக்கிளை திருடியவர் மதிலுடன் மோதுண்டு பலத்த காயமடைந்தார். இதனையடுத்து காயமடைந்த நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன், விசாரணை மேற்கொண்டபொலிஸார் மோட்டார் சைக்கிளை உரியவரிடம் ஒப்படைத்ததாக தெரிவிக்கப்படுகிறது. (57)

# கடமையைப் பொறுப்பேற்றார் மன்னார் அரச அதிபர்

(மன்னார்)

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் தனது கடமையினை பொறுப்பேற்றுள்ளார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக கடந்த 2007ஆம் ஆண்டு முதல் கடமையாற்றிவந்த ஏ.நிக்கொலாஸ்பிள்ளை கடந்த 6ஆம் திகதியன்று திடீர் இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் கொழும்பு பொது நிர்வாக அமைச்சிற்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக முல்லைத்தீவு அரச அதிபராகக் கடமையாற்றி வந்த வேதநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே அவர் நேற்று தனது கடமையினை பொறுப்பேற்றார்.

இதேவேளை, முல்லைத்தீவு அதிபராக தற்போது மன்னார் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றிய ஏ.பத்திநாதனும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யோசவாஸ் முனிவரின் திருவிழா வழிபாடுகள்

இவ்வருடம் அருளாளர் யோசவாஸ் முனிவரின் விண்ணகப் பிறப்பின் மூன்றாம் நூற்றாண்டுப் பெருவிழா 2011.01.23 ஞாயிறு அன்று கொண்டாடப்படும். அன்று காலை 7.00 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் கொட்டடி அருளாளர் யோசவாஸ் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். ஆயத்த வழிபாடுகள் 18ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும். நற்கருணை விழா 22ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும்.

ஓட்டுமடம் புனித செபஸ்ரியார் ஆலயத்திருவிழா 2011.01.30 ஞாயிறு அன்று கொண்டாடபபடும். அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு திருவிழா திருப்பலி ஆரம்பமாகும். ஆயத்த வழிபாடுகள் 26ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும் என்று பங்குத் தந்தை அருட்தந்தை ராஜசிங்கம் அறியத்தருகின்றார். (52)

# கட்டடத்தொழிலாளி விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் இரண்டு மாடிக்கட்டடம் ஒன்றின் கட்டுமாணப் பணிகளின் போது தவறிவீழ்ந்து மின்தாக்கத்திற்கு இலக்காகி ஆபத்தான நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் நேற்றுக் காலை சிகிச்சை பயன்இன்றி மரணமடைந்தார்.

நாவாந்துறையைச் சேர்ந்த அ.தபீபன் (வயது-28) என்பவரே நேற்றுக்காலை சிகிச்சை பயன்இன்றி மரணமடைந்தார். யாழ். நகரில் யூனியன்வங்கிக்கு முன்பாக இச்சம்பவம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# கட்டுரைப்போட்டி

(கொக்குவில்)

துன்னாலை, நாடகக்கலைஞர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்தமாக அகில இலங்கை கலை இலக்கியச் சங்கம் கட்டுரைப் போட்டியை நடத்த முன்வந்துள்ளது.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்கு என்னும் பொருளில் கட்டுரைகள் அமையவேண்டும். நிபந்தகைகள் இதற்குமேல் எதுவும் கிடையாது.

சர்வதேச மட்டத்தில் நடத்தப்படுகின்ற மேற்படி போட்டியில் ஆண்,பெண் எவரும் எந்த வயதுக்கட்டுப்பாடும் இல்லாமல் பங்கெடுக்க முடியும்.

அடுத்த மாதம் 25ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன்பாக பண்டிதர் பொன். சுகந்தன், தலைவர், அகில இலங்கை கலை இலக்கியச் சங்கம், நெல்லியடி, கரவெட்டி என்னும் முகவரிக்கு கட்டுரைகள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பரிசு பெறும் முதல் மூன்று கட்டுரைகளுக்கு பணப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படுவதோடு மேலும் 10 கட்டுரைகளுக்கு சான்றிதழ் வழங்கப் படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (68)

# விளையாட்டுப்போட்டி

(இளவாலை)

இளவாலை- பெரியவிளான் புனித அந்தோனி யார் ஆலயத்தின் இளையோர் யுவதிகளுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி எதிர் வரும் சனிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் ஆலய பங்குத்தந்தை அருட்திரு. புனிதகுமார் தலைமையில் ஆலய வளாகத்தில் இடம்பெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இளவாலை ஹென்றியரசர் கல்லூரியின் அதிபர் அருட்தந்தை யேசுதாஸ் அடிகளும் சிறப்பு விருந் தினராக பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கத்தின் பொது முகாமையாளர் கி. குணரட்ணமும் கலந்து கொள்வார். (52)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்**

- **வணிகமாணி/தொழில் நிர்வாகமாணி இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் - 2010**
  **(1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருடம்)**
- **1ஆம், 2ஆம், வருடம் தொழில் நிர்வாகமாணி முதலாம் அரையாண்டு பரீட்சைகள் - 2010**

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் 17.01.2011ஆம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்துக்கு ரூபா 50.00 பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவங்களை பீடாதிபதி அலுவலகத்தில் 24.01.2011 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர்.

**பதிவாளர்**
11.01.2011

(C/196)


# நெடுந்தீவுக்கான குமுதினிப்படகு விரைவில் சேவையில் ஈடுபடவுள்ளது

சுமார் எட்டுக்கோடி ரூபா செலவில் திருத்தி அமைக்கப்பட்ட குமுதினி பயணிகள் படகு விரைவில் குறிகாட்டுவான் நெடுந்தீவு கடற்பயணத்திற்கு ஈடுபடுத்தப்படவிருப்பதாக யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இப்படகு அடுத்தவாரம் மீண்டும் சேவையில் ஈடுபடவுள்ளது. இப்படகு பழுதடைந்தமையால் கடந்த இரண்டு மாத காலமாக நெடுந்தீவு படகுச் சேவை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

தற்போது குறிகாட்டுவான் நெடுந்தீவு கடல்பயணத்துக்கு சாதாரண வள்ளங்கள் மூலமே சேவை நடைபெற்று வருகின்றது. மீள நிர்மாணிக்கப்பட்டுள்ள பயணிகள் படகு 300 பேர் பயணம் செய்யக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பொங்கல் விழா

(கொக்குவில்)

நாகேஸ்வரம், அளவெட்டி மேற்கு ஸ்ரீநாகவரத நாராயணர் கோவிலில் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை பொங்கல் விழாவும், 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏகாதசி தீர்த்தமும் நடைபெறவுள்ளன.

பொங்கல் விழா ஆலய வளாகத்தில் காலை 5 மணிக்கு ஆரம்பமாகும். ஏகாதசி தீர்த்தம் மறுநாள் காலை 8மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் தொடங்கும். 9 மணிக்கு சிறப்புச் சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீமத் நாராயணர் வீதியுலா எழுந்தருள்வார். (68)

மனிதர்கள் பேசாமல் இருக்கக்கற்றுக்கொண்டால் எத்தனை எத்தனையோ தொல்லைகளைத் தவிர்த்துவிடலாம். எப்போதும் அமைதியாக இருந்து வலிமையைத் திரட்டுவாயாக.

- ஸ்ரீ அன்னை -


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU



இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com


## மனிதாபிமான உதவி வேண்டும்

செயற்கை அனர்த்தங்களினாலும் இயற்கைச் சீற்றங்களினாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த கிழக்கு மக்கள் படிப்படியாக வழமையான இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்போது, கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் பெரும் மழைப்பொழிவு அவர்களை நிர்க்கதிக்குள்ளாக்கி விட்டுள்ளது.

அண்மைய நாட்களில் நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து, வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பெய்த அடை மழையானது பெருமளவு மக்களை இடம்பெயர வைத்துவிட்டது.

இம்மழையினால் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களே பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டங்கள் வெள்ளத்தில் சூழப்பட்டதினால், அங்கு வாழ்ந்துவந்த சுமார் ஏழரை லட்சம் மக்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேறி நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

வெள்ளத்தில் சிக்கியவர்களை விமானப்படையினர் ஹெலிகொப்டர் மூலம் மீட்டதாகவும், பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்கும் பணிகளில் படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து நீடிக்கும் சீரற்ற காலநிலையை அடுத்து, கிழக்கிலுள்ள குளங்கள் பெருக்கெடுக்கும் நிலையில் அவற்றின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதாகவும், பாடசாலைகள், பல்கலைக்கழகம் உட்பட சில வைத்தியசாலைகள் மூடப்பட்டிருப்பதாகவும், போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் வெள்ளப்பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சமைத்த உணவு வழங்கி அவர்களின் உடனடித் தேவைகள் பூர்த்திசெய்யப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

போக்குவரத்து சேவைகள் பெருமளவு துண்டிக்கப்பட்டிருப்பது அவர்களுக்கான உதவிப் பொருட்கள் சென்றடைவதில் பெரும் காலதாமதத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் மழைப்பொழிவிற்கான காலநிலை காணப்படுவதால் முகாம்களில் தஞ்சமடைந்து அவலங்களைச் சுமந்துள்ள மக்களின் சுகாதார வசதிகளும் கவனிக்கப்படல் வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களுக்கும் அங்கு பலத்த தட்டுப்பாடு நிலவிவருவதால், அப்பொருட்களைக் காலதாமதமின்றி அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வசதிகளை அவர்களை நேரில் சென்று பார்க்கும் அமைச்சர்களும், அதிகாரிகளும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

இந்நிலையில், கிழக்கின் சகோதர மக்கள் அங்கு படும் அவலங்களையும், எதிர்நோக்கும் துன்பதுயரங்களையும் போக்குவதற்கு எமது பங்களிப்பையும் நாம் செய்யவேண்டும்.

பாதிப்புக்குள்ளாகியிருக்கும் அந்த மக்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் இங்குள்ள வர்த்தகர்கள், செல்வந்தர்கள், சமய நிறுவனங்கள், பொது அமைப்புகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் தம்மாலான உதவிகளைக் காலம்தாழ்த்தாது செய்வதற்கு முன்வரவேண்டும்.

சோதனை மேல் சோதனைகளைத் தாங்கி அவற்றை சுமந்து நிற்கும் எம் சகோதர மக்களுக்கு மனிதாபிமான முறையில் சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஆகியன இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க முன்வரவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

-ஆசிரியர்-

# சிறுவர் மீதான துஷ்பிரயோகங்கள் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட உள சமூக இணைப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபர அடிப்படையில் 10 வரையான சிறுவர் துஷ்பிரயோகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இதனடிப்படையில் சிறுவர் இல்லங்கள், பாடசாலை போன்ற இடங்களிற்குச் சென்று அங்கு சிறுவர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் இது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'கற்பனா உளவியல்' எனும் தலைப்பின் கீழ் விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் சிறுவர் அபிவிருத்திக் குழு வைத்தியசாலைகளுக்குச் சென்று அங்கு சிறுவர்களுக்கும் இது தொடர்பாக விழிப்புணர்வு வழங்கும் செயற்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைகேடுகளை மாவட்டச் செயலகத்திலுள்ள உள சமூக அலுவலகத்திலும் சிறுவர் நன்னடத்தை பிரிவிலும் தெரிவிக்கலாம். இதைவிட அவசர தேவைகள் ஏற்படும் இடத்தில் 1929 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக பெற்றோர்களும் சமூகத்தவர்களும் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (28)

# யாழ். வந்து சென்ற பெண்ணிடம் 8 இலட்சம் நகைகள் கொள்ளை!

## ஆறு மணி நேரத்தில் சந்தேக நபர் கைது

(நமது நிருபர்)

இளம் பெண் ஒருவரிடம் எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்துச் சென்ற சம்பவம் நடைபெற்ற ஆறு மணித்தியாலத்துக்குள் இருவரைத் தாம் கைது செய்ததாக மதவாச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, மொறட்டுவ சொய்ஸாபுரத்தைச் சேர்ந்த குறித்த இளம் பெண் தனது கணவர் மற்றும் பிள்ளையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர்களுடன் விடுமுறையைக் கழித்துவிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பியபோதே இந்த நகை அபகரிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கொழும்பு செல்லும் வழியில் மதவாச்சிக்கும் ரம்பாவைக்கும் இடையில் உள்ள உணவுச்சாலை ஒன்றின் முன்பாக பஸ் வண்டி நிறுத்தப்பட்டதை அடுத்து கடைக்குப் பின்னால் உள்ள மலசல கூடத்துக்குக் குறித்த இளம் பெண் தனது மகளுடன் 20 பவுண் நகைகளையும், கையடக்கத் தொலைபேசியையும் வைத்திருந்த பயணப்பையுடன் சென்றபோதே திருடர் அப்பையை அபகரித்துச் சென்றதாகவும், கணவனும், மனைவியும் மதவாச்சிப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து அவர்கள் விசாரணைகளைத் துரிதப்படுத்தி அடகுபிடிக்கும் கடைகள் மற்றும் வங்கிக்குத் தகவல் தெரிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, அபகரிக்கப்பட்ட நகைகளின் ஒரு பகுதியை அடகுவைக்கச் சென்றபோது, கடை உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவலை வழங்கியதையடுத்து சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்ததுடன் அவர்கள் வழங்கிய தகவல்களை அடுத்து, அவர்களது வீட்டுத் தோட்டத்தில் போத்தலில் அடைத்து புதைக்கப்பட்டிருந்த நகைகள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். (வி)

# ஒஸ்மானியக் கல்லூரி நடமாடும் சேவையில் 500 முஸ்லிம் குடும்பங்கள் பயனடைந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மோனியாக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற முஸ்லிம் பிரதேசத்திற்கான விசேட நடமாடும் சேவையில் 500 முஸ்லிம் குடும்பங்கள் நன்மையடைந்துள்ளதாக அஸ்மின் ஐயூப் மௌலவி தெரிவித்தார்.

நேற்று யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

இச் செய்தியாளர் சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாண முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு குறித்து தீவிரமாகச் செயற்பட்டு வருகின்ற யாழ். கிளிநொச்சி சமூக அமைப்புக்கள், யாழ் மாநகரசபை உறுப்பினர்கள் அனைத்துப் பள்ளிவாசல்கள், சமூக நலன் விரும்பிகள், இணைந்து 'யாழ். கிளிநொச்சி முஸ்லிம்' சம்மேளனம்' (J. K. M. F.) என்ற அமைப்பினை ஸ்தாபித்துள்ளன.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற முஸ்லிம் பிரதிநிதிகள் கூட்டமொன்றில் இவ் அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது.

இதன் முதலாவது நிர்வாகக் குழுக் கூட்டம் கடந்த முதலாம் திகதி நடை பெற்றது. இக் கூட்டத்தில் யாழ் முஸ்லிம்களின் மீள் குடியேற்றப்பதிவுகள், நடமாடும் சேவை. தேர்தல் பதிவுகள் என்பனவற்றை மேற்கொள்ளுமுகமாக யாழ்மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அவர்களிடம் சம்மேளனம் அனுமதி கோரியது. இதற்கமைய யாழ் அரச அதிபர் இந்நடமாடும் சேவையை ஏற்பாடு செய்து இன்று அதனை ஆரம்பித்து வைத்துள்ளார். அதற்கு எமது சம்மேளனத்தின் சார்பிலும் முஸ்லிம் மக்களின் சார்பிலும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் இந் நடமாடும் சேவையில் பங்குபற்றிய யாழ்ப்பாணம், வேலணை, சாவகச்சேரி பிரதேச செயலாளர்கள் அவர்களுக்கும்எமது நன்றிகள் எனவும் தெரிவித்தார். தொடர்ந்து மாலை வரை இவ் நடமாடும் சேவை நடைபெற்றது. (பா)



# இளம் வேட்பாளர்களே இடம்பெறவேண்டுமாம்

(வவுனியா)

வன்னி மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்துக் கட்சிகளுடைய வேட்பாளர் பட்டியலிலும் இளம் வேட்பாளர்கள் கட்டாயம் இடம்பெறவேண்டும் என வன்னி மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி ஏ.எஸ். கருணாநிதி தெரிவித்தார்.

கட்சிகள் தாம் போட்டியிடுகின்ற சபைக்கு ஏற்றவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளம் வேட்பாளர்கள் வேட்பாளர் பட்டியலில் இருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார். வன்னி மாவட்டத்தில் 12 பிரதேச சபைகளுக்கு நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளது.

# இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்

# மாதகல் மீனவர்கள் பெருமளவில் பாதிப்பு

(மாதகல்)

**மாதகல் கடற்பகுதியில் இந்திய இழுவைப் படகு மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளால் உள்ளூர் மீனவர்கள் பலத்த நஷ்டமடைவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.**

குறிப்பாக, மாதகல் கடற்பகுதிக்கு அண்மையாக நாளாந்தம் வரும் இந்திய இழுவைப் படகுகள், உள்ளூர் மீனவர்களின் வலைகளை அறுத்துச் செல்வதனால், அவர்களது தொழிலும் பாதிக்கப்படுவதுடன் வலைகளும் இல்லாது போகின்றன. இதனால், தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் வரும் இந்திய இழுவைப் படகுகள், தாம் கடலில் விரித்துவிடும் வலைகளை இழுத்துச் செல்கின்றன. இதனால், தமது பெருமளவு வலைகள் அள்ளுப்பட்டுச் சென்று விடுகின்றன. இதனால், தொழிலும் இல்லாமல் வலையும் இல்லாமல் பெரிதும் கஷ்டப்படுகின்றோம்.

ஒவ்வொரு வலைகளும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவை. தாம் பத்துப் பதினைந்து வலைகளை விரித்துவிட்டால் அவை அனைத்தும் அள்ளுப்பட்டுச் செல்கின்றன எனவும், இதனால், தாம் பொருளாதார ரீதியாகப் பெரும் பாதிப்படைவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில நாட்களாக, இழுவைப் படகுகளின் அத்துமீறலால் மாதகல் கடற்பகுதியில் ஒவ்வொரு மீனவரும் ஏழு, எட்டு வலைகளைப் பறிகொடுத்து நிற்கின்றனர். முன்னர் யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில், கடற்படையினரின் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியுடன் ஒரு சில இடங்களில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. ஆனால், தற்போது யுத்தம் முடிவடைந்து கடற்படையினரின் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், சுதந்திரமாகத் தொழிலைச் செய்யலாமென்றால் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலால் அது நடைபெறவில்லை.

தற்போது தமது மீன்பிடித் தொழில் கரையை அண்டிய பகுதிகளிலேயே நடைபெற்று வருவதாகவும் இதனால் தொழில் பெரும் நஷ்டத்திற்குள்ளாவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே, இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலைத் தடுப்பதற்கு உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதன் பூர்வாங்க கிரியைகள் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.07 மணி முதல் ஆரம்பமாகவுள்ளது. 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல் மறுநாள் சனிக்கிழமை மாலை 5.00 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகள் மாவை ஆதீன கர்த்தா மஹாராஜ ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் தொடர்ந்து 45 தினங்கள் தினமும் காலை 10.00 மணிக்கு மண்டலாபிஷேகமும் இடம்பெறவுள்ளது. (60)

## பணம் பறிக்கும் நபரை இனங்கண்ட மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதான வீதியில் கோவிந்தன் கடைச் சந்திக்கு அண்மையாக பொதுமக்களிடம் பணம் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்ட ஒருவரைப் பொதுமக்கள் இனங்கண்டுள்ளனர்.

இவ்வீதியூடாகச் சென்ற பொதுமக்களை மறித்து சிங்களத்தில் பேசிப்பணம் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்ட இந்நபர் இராமநாதபுரம் சின்னச் சந்தையடியில் கடையொன்றில் பணிபுரிபவர் என அடையாளம் காணப்பட்டார்.

இவர் மன்னாரைச் சேர்ந்தவர் என்று அறிய முடிவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். இந்நபரைப் பற்றிய விபரங்களைப் பொதுமக்கள் இராணுவத்தினரிடம் தெரிவித்ததுடன் பொலிஸாருக்குத் தகவலை வழங்கி இவரைக் கைது செய்யும் முயற்சியிலும் பொதுமக்கள் ஈடுபட்டனர். (69)

## தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர்நீத்த மக்களை நினைவு கூர எவருமில்லை

(யாழ். நிருபர்)

உலகத் தமிழராய்ச்சி மாநாட்டின்போது கொல்லப்பட்ட தமிழர்களின் 37ஆவது சிரார்த்த தினம் நேற்று முன்தினம் திங்கட்கிழமையாகும். இந்த அப்பாவிப் பொதுமக்களின் நினைவு தினம் வருடா வருடம் தை மாதம் பத்தாம் திகதி யாழ். நகரில் அனுஷ்டிக்கப்பட்டு வருவது வழக்கம்.




ஆனால், இந்த ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் எதுவும் இடம்பெறாதது குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர். இந்தப் பொதுமக்களின் நினைவாக வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாகவுள்ள நினைவு ஸ்தூபிக்கு ஒருசிலர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திவிட்டுச் சென்றனர். இந்த நினைவுத்தூபி அண்மையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு மெருகூட்டப்பட்டது. ஆனால், இம்மக்களின் சிரார்த்த தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும் என மக்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தும் அது கைகூட வில்லை என்று வயது முதிர்ந்த ஒருவர் கவலை தெரிவித்ததை அறியக் கிடைத்தது. (18)

## யாழ். நாடகத்திற்கு 5 தேசிய விருது முப்பது வருடங்களின் பின் கிடைத்தது

(மல்லாகம்)

25ஆவது சர்வதேச இளைஞர் வருடத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சும் இணைந்து நடாத்திய 32ஆவது தேசிய இளைஞர் விருது வழங்கும் நிகழ்வில் மல்லாகத்தைச் சேர்ந்த எஸ். ரி. குமரன், எஸ். ரி. அருள்குமரன் ஆகியோரின் எழுத்துருவாக்கம், நெறியாள்கை மற்றும் தயாரிப்பில் உருவாகிய “கண்டல்” எனும் அபத்த நாடகம் ஐந்து தேசிய விருதுகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் 30 வருடங்களின் பின் யாழ்ப்பாணத்தின் நாடகமொன்றுக்கு தேசிய விருதுகளும் கிடைத்துள்ளது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் தமிழ் மொழி மூலமாக நான்கு நாடகங்கள் பங்குபற்றியிருந்தன. யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து “கண்டல்” என்ற நாடகமும், வவுனியா மாவட்டத்திலிருந்து “எங்களுக்காக” என்ற நாடகமும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து “பயணப்பை” என்ற நாடகமும், அனுராதபுரத்திலிருந்து “கலைந்த கனவுகள்” என்ற நாடகமும் பங்குபற்றியிருந்தன.


கடந்த ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி பிற்பகல் 6.30 மணிக்கு கொழும்பு லயனல் வென்ட் கலையரங்கில், இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் இந்த நாடகப் போட்டிகள் இடம்பெற்றன. பேராசிரியர் சபா. ஜெயராசா, வானொலி அறிவிப்பாளர் நாகபூஷணி கறுப்பையா மற்றும் மூன்று பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் நடுவர்களாக இருந்தனர். இந்தப் போட்டியிலேயே மேற்படி நாடகம் முதலிடத்தைப் பிடித்தது.

அதிகம் வசனங்களின்றி, செயலாற்றத்துடன் கூடிய இந்த நாடகத்திற்கு தயாரிப்பு, நெறியாள்கை, வேடவுடை, ஒப்பனை, சிறந்த ஆற்றுகை என்பவற்றுக்காகவே ஐந்து விருதுகள் கிடைத்தன.

30 வருடங்களின் பின் முதல் தடவையாக, யாழ்ப்பாண நாடகத்திற்கு தேசிய விருது கிடைத்ததுடன், அபத்த நாடகமொன்று முதற்தடவையாக தேசிய விருதைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நாடகத்தில் எட்டு நடிகர்கள் பங்குபற்றியதுடன், இதற்கான இசையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் எஸ். சதீஸ் வழங்கியிருந்தார்.

கடந்த 29ஆம் திகதி பிற்பகல் 6.30 மணிக்கு மகரகம இளைஞர் நிலைய பிரதான அரங்கில் இளைஞர் அலுவல்கள் திறன் விருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.






## மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் படுகாயமடைந்தார்

(யாழ். நிருபர்)

கொழும்புத்துறை மேற்கில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த என். ஆனந்தராசா என்பவரே கடும் காயங்களுக்கு இலக்கானார். மோட்டார் சைக்கிளில் வந்த இவரை மற்றைய மோட்டார் சைக்கிளில் வந்த நபர் மோதிவிட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (18)

## கொழும்பில் நடைபெறவுள்ள ஆங்கில தகுதிகாண் பரீட்சை

(மண்டைதீவு)

மக்கள் வங்கிக்கு முகாமைத்துவ பயிலுநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் ஆங்கில அறிவுத் தகுதிச் சோதனை எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க அறிவித்தார்.

இந்தப் பதவிக்கு விண்ணப்பித்த பரீட்சாத்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து விண்ணப்பித்தவர்கள், கொழும்பில் ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களிலேயே தோற்றவேண்டும்.

இந்தத் தகுதிச் சோதனையில் 40 அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளே வங்கி நியமனத்துக்கான இரண்டாம் கட்டப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுவர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (23)

# சுன்னாகம், மருதனார்மட சந்தைகளை அபிவிருத்தி செய்ய குழுக்கள் அமைப்பு

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



யாழ் மாவட்டத்தில் மிக பிரதான சந்தைகளாக சுனனாகம் மற்றும் மருதனார் மடம் சந்தைகள் காணப்படுகின்றன.

நாளாந்தம் இச்சந்தைகளுக்கான தனித தனி அபிவிருத்திக் குழுக்களை உருவாக்கி அதன் மூலம் அவர்களின் ஆலோசனைகள் கருத்துக்கள் பெறப்பட்டு சந்தைகள் அபிவிருத்தி செய்யப்படவுள் ளது என ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் இடமபெற்ற கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் இச்சந்தைகளுக்கான அபிவிருத்திக் குழுக்களானது விவசாய சம்மேளன பிரதிநிதகள் வர்த்தகச் சங்க பிரதிநிதிகள் பிரதேச சபை உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் என்போர் உள்ளடங்கலாக சந்தை அபிவிருத்திக் குழு உருவாக்கப்படும்.

இதன் மூலம் காலப்போக்கில் இச்சந்தைகளின் அபிவிருத்தி செயற்பாடுகள் இவ் அபிவிருத்திக் குழுவின் சிபாரிசின் மூலம் மேற்கொள்ளப்படும். இவ்வருடமும் சந்தைகளின் ஆரம்ப கட்ட அபிவிருத்தி வேலைகளுக்கு என மருதனார்மடம் சந்தை 8 மில்லியன் ரூபாவிலும் சுன்னாகம் சந்தை 05 மில்லியன் ரூபாவிலும் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரி வித்தார்.

மேலும் இச்சந்தைகளில் விவசாயிகளிடம்ருந்து பொருட்கள் கொளவனவு செய்யப்படும் போது, வியாபாரிகளால் பெறப்பட்டு வந்த 10 வீதக் கழிவு தொடரபல் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

அதாவது கிழங்குப் பொருட்களுக்கு குறிப்பாக மரவள்ளி, கருணைக்கிழங்கு போன்றவற்று மட்டுமே 10 வீதக் கழிவு அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் ஏனைய பொருட்களுக்கு இவ் 10 வீதக் கழிவு அனுமதிக்கக் கூடாது என்றும் இது தொடர்பில் விவசாய சம்மேளனம் அறிக்கை ஒன்றை தயாரித்து வெளியிட வேண்டும் என்பதோடு பிரதேச சபை இது தொடர்பான அறிவித்தல் விளம்பரம் ஒன்றை சந்தையில் காட்சிக்கு வைக்க வேண்டும். இந்த நடைமுறையினை ஏற்றுக்கொள்ளாத அல்லது பின்பற்றாத வியாபாரிகளின் சந்தை, வியாபார உரிமம் இரத்துச் செய்ய வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு விவசாயிகளுக்கு சம்மேளனத்தின் ஊடாக வழங்கப்படுகின்ற சலுகைகள் இரத்து செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதனை பிரதேச சபை கண்காணிக்க வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இத் தீர்மானங்கள் அனைத்தும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில் வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் மஞ்சுளாதேவி பிரதேசசபை செயலாளர் சுலோஜனா பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் சிவகுமார். மேலதிக பிரதேச செயலர் யசோதா பிரதேச சபையின் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஞானவேல் ராஜா ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் பிரதேச இணைப்பாளர் ஜீவன் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (29)

## மின்பிறப்பாக்கியின் சேவை இந்தமாதம் ஆரம்பமாகும்

(யாழ் நிருபர்)

கைதடி அரச முதியோர் இலலத்திற்கு வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட மின்பிறப் பாக்கியை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெரும்பாலும் இந்த மின்பிறப்பாக்கியின் ஆரம்ப விழா இந்த மாத இறுதிக்குள் நடாத்தி வைப்பதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக இல்ல அத்தியட்சகர் தெரிவித்தார்.

அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொணடு ஜெனரேட்டரை ஆரம்பித்து இல்லத்திற்கான மின் விநியோகத்தை சீர்செய்து வைக்கவுள்ளனர். (18)

## மஹோற்சவப் பெருவிழா

யாழ்ப்பாணம் வட - வடகிழக்கு அருள்மிகு கொண்டலடி விநாயகர் இறை. மூத்தநயினார் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. இது எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை வரை பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.00 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறும் அன்றைய தினம் "மணகோற்சவத்தில் ரதோற்சவம்" எனும் தலைப்பில் மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன் அவர்களின் சொற்பொழிவு இடம்பெறும். (60)

# குடாநாட்டுப் பத்திரிகைகள் பொறுப்புடன் செயற்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் சமூக அக்கறையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் செய்திகளை வெளியிட வேண்டுமென யாழ். மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினருமான எம். றெமிடியஸ் வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். வர்த்தக சங்க பிரதிநிதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களது கோரிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற போதே அவர் மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.

கனடாவிலிருந்து வந்தவர் பருத்தித்துறையில் இளம் பெண்ணை பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கிவிட்டு கனடாவிற்கு தப்பியோட்டம் ஊர்காவற்றுறையில் பத்து பேர் இளம் பெண்ணை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்த முயற்சி போன்ற அண்மைய நாட்களில் வெளிவந்த எவ்வித ஆதார மும்றற சில செய்திகளை எடுத்துக்காட்டிய றெமிடியஸ் இச் செய்திகள் மூலம் யாழ். மக்கள் நாகரீகமற்றவர்கள் என்பதான தோற்றப்பாடே வெளி உலகிற்குக் காண்பிக்கப்படுவதாகவும் விசனம் தெரிவித்தார்.



எனவே பத்திரிகைகள் பொறுப்புணர்ச்சியுடன் செய்திகளை வெளியிட வேண்டும் எனத் தெரிவித்ததுடன் வெளியிடப்படும் செய்திகளின் நம்பகத் தன்மையினை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.




முரசுமோட்டை முருகானந்தா பாடசாலையில் தேசிய சேமிப்பு வங்கிக் கிளை கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படுவதைக் காணலாம்.

## காணாமற் போனவர்களை மீட்டுத்தருவதாக கப்பம் பெற்ற இருவர் வவுனியாவில் கைது

(வவுனியா)

போரின் போது காணாமல் போன சொந்தங்களைத் தேடித் தருவதாகத் தெரிவித்து பாரியளவு கப்பப் பணத்தைப் பெற்றுக்கொண்ட இருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இருவரும் சுமார் பத்து லட்சம் ரூபா வரையில் இவ்வாறு மோசடி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

பிரதான சந்தேக நபர் முன்னர் புலிகளினால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

போரின் போது காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பதற்காக கிளிநொச்சி பிரதேச மக்களிடம் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

காணாமல் போன இளைஞர் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவரை விடுதலை செய்வதற்கு பெருந்தொகைப்பணம் செலவிட நேரிடும் எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் தமிழ் அரசியல் கட்சியொன்றின் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எக்ஸ்றே படப்பிடிப்பு பணிகள்

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் எக்ஸ்ரே படப்பிடிப்பு இயந்திரம் ஒன்று திடீரெனப் பழுதடைந்ததால் படப்பிடிப்புக்கள் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெற்று வருகின்றன.

மற்றைய எக்ரே படப்படிப்பு இயந்திரம் மூலமே இந்த படப்பிடிப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்று வருவதால் நோயாளர்கள் சிரமத்திற்குள் தள்ளப்பட்டுள்ளனர். பழுதடைந்த இவ் இயந்திரத்தை உடனடியாகத் திருத்துவதற்கு கொழும்பில் இருந்து தொழில் நுட்பவியலாளர் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார். (18)

## இன்றைய பலன்

(12.01.2011 புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புகள்**

விகிர்தி மார்கழி 28

இராகுகாலம் 12.33 - 2.03, சுபநேரம் 5.03 - 6.33, ரேவதி மு.இ7.45 வரை, அட்டமி பி.இ. 4.14, மரணயோகம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

-ஆதினி-

மேடம்:- உதவி செய்வதில் ஆர்வம், மேலதிகாரி உதவி, இனசனபந்துகள் வருகை.

ரிஷபம்:- போட்டிகளில் வெற்றி, நினைத்த காரிய சித்தி, பயணம்.

மிதுனம் :-கருத்து முரண்பாடு, பெரியோர் வெறுப்பு, அகால போசனம்.

கடகம்:-காரிய சித்தி, முயற்சியில் ஆர்வம், தாய்வழி உதவி.

சிம்மம்:- நினைத்தகாரியச் சித்தி, இனிய சந்திப்பு, முயற்சிபலிதம்.

கன்னி :- தொழில் பாதிப்பு, வேண்டாத செயல், வீண் செலவு.

துலாம் :- காரிய சித்தி, வெளிநாட்டுதவி, வழக்கில் வெற்றி.

விருச்சிகம் :- தேகாரோக்கிய விருத்தி, பயனுள்ள சந்திப்பு, தொழில் இலாபம்.

தனுசு:- மனக்கசப்பு, தேவையில்லாத செலவு, இனபந்துக்கள் முரண்பாடு.

மகரம்:- கௌரவம் உயரல், தேக நலன் விருத்தி, அபூர்வ சந்திப்பு.

கும்பம் :- பதவி மாற்றம், பிதாவழி உதவி, தூரதேசப் பயணம்.

மீனம்:- பயணத்தில் பொருள் இழப்பு, அவசரப் படல், கருத்து முரண்பாடு,

# நாட்டில் வலுவான அரசு உள்ளதனால் சொத்துக்களை விற்கத் தேவையில்லை

## ஜனாதிபதி மஹிந்த

(கொழும்பு)

தற்போது நாட்டில் வலுவான ஓர் அரசாங்கம் ஆட்சி நடத்தி வருவதாகவும், இதனால் அரசாங்க சொத்துக்களை விற்பனை செய்ய வேண்டிய அவசியம் அரசுக்குக் கிடையாது எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதெரிவித்துள்ளார்.

மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு ஐ.எஸ்.ஓ தரச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நடைபெற்றபோது, விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த இதனைக் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த காலங்களில் அரச சொத்துக்களை விற்பனை செய்யும் திட்டங்கள் காணப்பட்டன.

தற்போது நாட்டில் வலுவான ஓர் அரசாங்கம் ஆட்சி நடத்தி வருகின்றது, மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் காணப்படுகிறது, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் நல்ல புரிந்துணர்வு காணப்படுகிறது.

ஒரே அணியாக நாட்டில் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்துவருகின்றது. சில தரப்பினர் நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைப்பதற்கு முயற்சித்து வருகின்றனர்.

அபாண்டமான பழிகளைச் சிலர் வெளியிட்டு வருகின்ற போதிலும் பெரும்பான்மையான மக்கள் உண்மை நிலைமையை அறிவார்கள். மக்கள் நாற்பது ஆண்டுகளாக என்னை அறிந்து வைத்துள்ளனர். என்னை ஒரு சர்வாதிகாரி என வெளிப்படுத்த சிலர் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

ஊடக சுதந்திரம் கிடையாது என சிலர் குற்றம் சுமத்துகின்றனர். செய்தித் தாள்கள் மற்றும் இணையத் தளங்களைப் பார்த்தால் நாட்டில் எவ்வாறான ஊடக சுதந்திரம் காணப்படுகின்றது என்பதனை விளங்கிக் கொள்ளமுடியும்.

ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டத்தை வழங்க வேண்டாம் என சில தரப்பினர் ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரியதாகவும், நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைப்பதற்கு அவர்கள்



முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார்.

# மோசமான காலநிலை காரணமாக அரசுக்கு 30 பில்லியன் ரூபா நட்டம்

(கொழும்பு)

கடந்த சில மாதங்களாக நாட்டில் நிலவிவந்த மோசமான கால நிலையினால் பொருளாதாரத்திற்கு 30 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் பெருமளவு பொருளாதார நட்டம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கடந்த மே மாதம் ஏற்பட்ட மழையினால் சுமார் ஆறு பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மழை வெள்ளம் காரணமாக பொதுமக்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பில் சரியான மதிப்பீடுகள் இது வரையில் செய்யப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, அண்மைய நாட்களில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் இதுவரையில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

# புலிகளிடமிருந்து கருணா பிரிந்தமைக்கு ஐ.தே.கட்சி அரசாங்கம் காரணமில்லை

## நோர்வேயிடம் ரணில் கூறினாராம்



(கொழும்பு)

புலிகள் அமைப் பிலிருந்து கருணா பிரிந்து சென்றமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் காரணமில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நோர்வே அரசிடம் தெரிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள தகவல் பரிமாற்றத்தில் கூறப்பட்டுள்ளது. புலிகளுக்கும் கருணாவுக்கும் ஏற்பட்ட பிளவில் அரசாங்கம் சம்பந்தப்பட வில்லை என்பதை ரணில் தெளிவு படுத்தியுள்ளதாக நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை மேற்கோள்காட்டி அமெரிக்கத் தூதுவர் ஜெ.்.ப்ரி லன்ஸ்ரெட் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதியன்று அனுப்பிய தகவல் பரிமாற்றத்தில் குறிப்பிட்டுள்ளது.

ஆனால், அப்போதைய பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொரகொட, கருணாவை விடுதலைப் புலிகளிடமிருந்து பிரித்த பெருமை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையே சேரும் என்று வெளிப்படையாகக் கூறியிருந்தார். அந்தக்கூற்றுக்கும் தற்போது விக்கிலீக்ஸ் வெளிவிட்டுள்ள தகவலுக்கும் முரண்பாடு உள்ளது.

இதேவேளை 2004 மார்ச் 13 மற்றும் 15 ஆம் திகதிகளில் அமெரிக்கத் தூதுவர் ஜெ.்.ப்ரியைச் சந்தித்த எரிக் சொல்ஹெய்ம், தாம் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வனை மார்ச் 11 ஆம் திகதியன்று வன்னியில் வைத்துச் சந்தித்ததாகவும், கருணாவுடனான முரண்பாட்டை அமைதியான வழியில் தீர்க்க விரும்புவதாக தமிழ்ச்செல்வன் தனக்குத் தெரிவித்ததாகவும் கூறியுள்ளார். அதோடு கருணா தனித்து இயங்குவதாகவும், ஆனால் கிழக்கிலுள்ள பெரும்பாலான போராளிகள் கருணாவுக்கு எதிராக இருப்பதாகவும் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்ததாகவும் சொல்ஹெய்ம் குறிப்பிட்டார்.

மேலும், கருணா நிலவரம் தமது உள்வீட்டு விவகாரம் என்றும் புலிகள் சொல் ஹெய்முக்குக் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய விக்கிலீக்ஸ் தகவல் சொல்ஹெய்ம் வன்னியில் இருந்தபோது திருகோணமலை மாவட்டத் தளபதி பதுமனையும் சந்தித்தார் எனக் கூறுகிறது.

# 2 இலட்சம் ஏக்கர் நெற்பயிர்கள் மழை வெள்ளத்தால் நாசமாகின

(கொழும்பு)

அம்பாறை, மட்டக்களப்பு, பொலனறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக 2 இலட்சம் எக்கர் நெற்பயிர்கள் வெள்ளத்தில் முற்றாக மூழ்கி அழிந்துள்ளதாக கமநல சேவைகள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

இந்த வெள்ள அனர்த்தத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கரும், அம்மாறை மாவட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கரும் திருகோணமலை மாவட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கரும் முற்று முழுதாக பாதிக்கப்பட்டுள்ளது. இதைவிட 200 சிறியளவிலான குளங்களும் ஐந்து பெரிய குளங்களும் சேதமடைந்துள்ளன.

அத்துடன் 1 இலட்சத்து 80 ஆயிரம் கிலோ பெரிய வெங்காயம் மாத்தளை மாவட்டத்தில் முற்றாக அழிவடைந்துள்ளது. எனினும் இதற்கான நஷ்டஈடுகள் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவ அதிகாரி போல் நடித்து பணமோசடி செய்தநபர் பிடிபட்டார்

(கொழும்பு)

நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ ஆகியோரின் பெயர்களைப் பயன்படுத்தி சுமார் 60 லட்சம் ரூபா மோசடி புரிந்த ஒரு நபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் தன்னை ஒரு இராணுவ அதிகாரிபோல் காட்டி அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் வேலை வாங்கித் தருவதாகக் கூறியே இவர் பலரிடமிருந்து பணம் பெற்றுள்ளார்.

இந்த நபர் 140க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளிடமிருந்து பணத்தைப் பெற்றுள்ளார் என்று தெரியவந்துள்ளது. இவர் கைது செய்யப்பட்டபோது நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து இவரால் ஏமாற்றப்பட்டவர்களின் பெயர் விவரங்களும் இவரிடம் இருந்துள்ளது.

அத்தோடு போலி அடையாள அட்டைகள் மூன்றும் இவரிடம் இருந்துள்ளன. அதில் ஒன்று இவர் தன்னை ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் இராணுவ உயர் அதிகாரிபோல் காட்டப் பயன்படுத்தப்பட்டதாகும்.

இவர் பாவித்த இராணுவச் சீருடை மற்றும் பதக்கங்கள் என்பன உட்பட பல போலி கடிதத் தலைப்புக்கள், ஆவணங்கள் என்பனவற்றையும் இவரிடமிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்குள் நாவலப்பிட்டி பொலிஸில் நற்சான்றுப்பத்திரம் பெற பல இளைஞர் யுவதிகள் வந்துள்ளனர். இந்த அதிகரிப்பு பொலிஸாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எதற்காக இந்த நற்சான்றுப் பத்திரம் என்று கேட்டபோது அம்பாந்தோட்டை துறைமுகத்தில் வேலை வாய்ப்புப் பெறுவதற்காக என்று எல்லோரும் பதில் அளித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்தே விசாரணைகளை முடுக்கிவிட்டபோது இந்த நபரின் மோசடி அம்பலமாகியுள்ளது. ஒவ்வொருவரும் தமக்குத் தேவைப்படும் தொழிலுக்கு ஏற்ப ஒரு லட்சம் முதல் ஐந்து லட்சம் வரை இந்த நபரிடம் செலுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இவர் இருந்த இடத்தைச் சுற்றி வளைத்த பொலிஸார் இவரைக் கைது செய்தனர்.



கிழக்கு மாகாணத்தில் பெய்து வரும் தொடர்ச்சியான மழைகாரணமாக, ஆலையடிவேம்பு பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து கலாசார மண்டபத்திலும், முஸ்லிம் மக்கள் அக்கரைப்பற்று பொதுக் கட்டடத்திலும் தஞ்சமடைந்துள்ளனர்.

# மெய்வல்லுநர் போட்டியில் சிவபூமி மாணவன் முதலிடம்



(சண்டிலிப்பாய்)

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவன் சிவராஜா துஷியந்தன் அகில இலங்கை விசேட தேவையுடையோருக்கான மெய்வல்லுநர் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றார்.

பத்தொன்பது வயதான இவர் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாமிடம்பெற்றார். வடமாகாணத்திலிருந்து இப்போட்டிக்காக ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

சர்வதேச விசேடதேவையுடையோருக்கான ஒலிம்பிக் போட்டி கிரிஸ் நாட்டில் நடைபெறவுள்ளது. இதற்காக எட்டு பேர் இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்டு கிரிஸ் பயணமாகவுள்ளனர். இந்த எட்டுப் பேரில் துஷியந்தனும் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு பல தரப்பிடமிருந்தும் வாழ்த்துக்கள் குவிந்தவண்ணமுள்ளது. (54)



அகில இலங்கை விசேட தேவையுடையோருக்கான மெய்வல்லுநர் போட்டியில் சிவபூமி மனவள பாடசாலையைச் சேர்ந்த சி. தர்சன், போல் பனிசியஸ், வித்தகன் ஆகியோர், உயரம் பாய்தல், ஓட்டப் போட்டிகளில் இரண்டாமிடங்களைப் பெற்றனர். பயிற்சி ஆசிரியர்களுடன் வெற்றியீட்டிய மாணவர்கள் நிற்பதைக் காணலாம். (54)



கால்பந்து வீரர் லியோனல் மெசிக்கு சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் (பீபா) சிறந்த கால்பந்து வீரருக்கான விருது வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது ஆண்டாகத் தொடர்ந்து மெசி இவ்விருதைப் பெற்றுள்ளார்.

கடந்த ஆண்டு அவர் மொத்தம் 58 கோல்கள் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சர்வதேச கால்பந்து பயிற்சியாளர்கள், சர்வதேச கால்பந்து அணித் தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட சில பத்திரிகையாளர்கள் வாக்களித்ததன் அடிப்படையில் மெசி இவ்விருதைப் பெற்றுள்ளார்.

# கூடைப்பந்து போட்டித் தொடர் வெள்ளியன்று ஆரம்பமாகிறது

(கொழும்பு)

தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டி நாளை மறுதினம் முதல் 17ஆம் திகதி வரை கண்டியில் நடைபெறவுள்ளது.

இலங்கைக் கூடைப்பந்தாட்ட சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ள ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நாளை மறுதினம் முதல் வரும் 17ஆம் திகதி வரை கண்டியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது.




தேசிய மட்டத்தில் இடம்பெறவுள்ள மேற்படி சுற்றுப் போட்டியில் இலங்கையின் பல பாகங்களையும் சேர்ந்த 20 ஆண்கள் குழுக்களும், 12 பெண்கள் குழுக்களும் கலந்துகொள்ளவுள்ளன.

இப்போட்டிகள் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி, புனித அந்தோனி கல்லூரி, திருத்துவக் கல்லூரி, புனித அந்தோனி பெண்கள் கல்லூரி போன்ற பாடசாலை மைதானங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும் அச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# கரம் சுற்றுப் போட்டியில் கிண்ணம் இந்தியாவிற்கு

(கொழும்பு)

இலங்கை கரம் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட ஆண், பெண்களுக்கான 'கரம்' சுற்றுப் போட்டியில் இந்தியா கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.


இலங்கை கரம் சம்மேளனம் விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்த 14ஆவது சார்க் கரம் விளையாட்டுப் போட்டித் தொடர் கொழும்பு கலதாரி விடுதியில் நடைபெற்றது. இதில் இலங்கை, இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 500 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மூன்று நாட்களாக நடைபெற்ற இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு இலங்கை, இந்திய அணிகள் தெரிவாகின. இதில் சம்பியனாக இந்திய அணி தெரிவானது. ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் இந்தியா கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டியின் சிறந்த ஆட்டநாயகனாக இந்தியாவின் யோகேஷ் பரதேஷ் தெரிவானார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். லியனகம உட்பட கரம் சம்மேளனத் தலைவர் விஜய சமரசிங்க, அதன் செயலாளர் லேன்ங்கின் மெதாயஸ் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்.

# நாட்டுக்காக விளையாடும் வகையில் வீரர்கள் தயாராக இருக்கவேண்டும்



(லண்டன்)

நாட்டுக்காக விளையாடுவதற்காக வீரர்கள் எப்போதும் தங்களைத் தயார்நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும் என இங்கிலாந்து பயிற்றுவிப்பாளர் அன்டிப் பிளவர் தெரிவித்தார்.


லண்டனிலிருந்து வெளியாகும் டெய்லி மெயில் பத்திரிகையில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் இங்கிலாந்து வீரர்களை நான் குற்றம் கூறவில்லை. ஆனால் இங்கிலாந்து அணிக்காக விளையாடுவதைக் காட்டிலும், ஐ.பி.எல். போட்டியில் விளையாட அதிகம் ஆர்வம் காட்ட வேண்டாம் என்றுதான் கூறுகிறேன்.

நாட்டுக்காக விளையாடுவதற்காக வீரர்கள் எப்போதும் தங்களைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். இங்கிலாந்து அணி அடுத்த சில மாதங்களில் அதிக போட்டிகளில் விளையாட வேண்டியுள்ளது. எனவே ஐ.பி.எல். போட்டிகளின் போது வீரர்களுக்கு காயம் ஏற்பட்டால், அது தேசிய அணியின் வெற்றியைப் பாதித்துவிடும். எனவே வீரர்கள் கவனத்துடன் செயற்பட வேண்டும் என்றார் அவர்.

# உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி சிறப்பாக விளையாடும் என்கிறார் ஜெயசூரிய

(கொழும்பு)



தற்போதுள்ள இலங்கை அணி சிறப்பாக உள்ளது. உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி சிறப்பாக விளையாடும் என்று நம்புகிறேன். இவ்வாறு சனத் ஜெயசூரிய தெரிவித்தார்.

நான்காவது ஐ.பி.எல். ஏலத்தில் சனத் ஜெயசூரியவை எவரும் ஏலம் எடுக்கவில்லை. இது குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, ஐ.பி.எல். போட்டியில் நான் விளையாட ஆர்வமாக இருந்தேன். இதுதொடர்பாக நான், உண்மையிலேயே பேச விரும்பவில்லை. கடந்த மூன்று ஐ.பி.எல். போட்டியில் நான் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக ஆடியது மகிழ்ச்சியானது. இந்த ஐ.பி.எல். போட்டியில் வாய்ப்பு இல்லாமல் போனது வருத்தம்தான்.

இந்திய துணை கண்டத்தில் உள்ள நாடுகள்தான் உலகக் கிண்ணத்தை வெல்ல வாய்ப்பு இருக்கிறது. 1996ஆம் ஆண்டு நாங்கள் உலகக் கிண்ணத்தை வென்றது மறக்க இயலாதது. அந்தப் போட்டியில் நாங்கள் மிகவும் சிறப்பாக விளையாடினோம். மேற்கிந்தியத்தீவில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் நாங்கள் இறுதிப்போட்டி வரை வந்ததும் சிறப்பானதாகும். சச்சின் சமீபத்தில் தனது 50ஆவது டெஸ்ட் சதத்தை அடித்தார். அவர் ஒரு சிறந்த துடுப்பாட்டவீரர். சிறந்த கிரிக்கெட்டின் தூதுவர் அவர் என்றார்.

# இளம் தலைமுறையினருக்கான அறிவுரை நேர்மையாக விளையாடவேண்டுமென்பதே




(டர்பன்)

சிறப்பாக விளையாட வேண்டும் என்பதை விடவும் நேர்மையாக விளையாட வேண்டும் என்பது முக்கியமானது. இதனையே நான் இளைய தலைமுறைக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க தொலைக்காட்சிக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு சச்சின் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, 1999-2000ஆம் ஆண்டு காலகட்டத்தில் சூதாட்டச் சர்ச்சை விஸ்வரூபம் எடுத்தது. இந்தப் பிரச்சினை தொடக்கத்தில் எனது ஆட்டத்தைப் பாதிக்கவே செய்தது. இந்திய அணியையும் ஒட்டு மொத்தமாக இந்த விடயம் பாதித்தது.

அப்போது பலரும் எங்களைச் சந்தேகக் கண்ணுடன் பார்த்தார்கள். அது மிகவும் மோசமான காலகட்டம் என்றே கூறவேண்டும். அந்தக் காலகட்டத்தில் அவுஸ்ரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய அணி 0-3 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரில் படுதோல்வியடைந்தது. அந்தக் காலகட்டத்தில் நான் மன அமைதியுடன் விளையாடும் நிலையில் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். அப்போது ஏற்பட்ட அதிர்ச்சியில் இருந்து மீள எனக்கு வெகுகாலம் ஆனது.

இது தொடர்பாக என்னை இதுவரை எவரும் அணுகியது இல்லை. நாம் விளையாட்டை உண்மையாக நேசிக்கும்போது அது தொடர்பான (சூதாட்டச் சர்ச்சை) தவறான செயல்களில் நிச்சயமாக இறங்கமாட்டோம்.

தோல்வியின் போதும், மோசமாக விளையாடும் போதும் எழும் விமர்சனங்கள் என்னைக் காயப்படுத்தவே செய்தன என்றார்.



சிட்னியில் நடைபெற்று வரும் ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் வெற்றிபெற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் பெலாரசின் விக்டோரியா அசரென்கா. இத்தொடரில் பல முன்னணி வீரர்கள் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரிஸ்பேன் நகரத்தில் திடீர்வெள்ளம் 19 பேர் பலி 72 பேரைக் காணவில்லை



(சிட்னி)

அவுஸ்ரேலியாவில் உள்ள குயின்ஸ்லாந்து மாநிலத்தில் கடந்த சில நாட்களாகப் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் மாநிலம் முழுவதுமே வெள்ளத்தில் சிக்கித் தவிக்கிறது.

இந்த நிலையில் பிரிஸ்பேன் நகரம் அருகே உள்ள தாவோப்டா என்ற ஊருக்குள் திடீரெனக் காட்டு வெள்ளம் புகுந்தது.

8 அடி உயரம் வரை வந்த இந்த திடீர் வெள்ளம் சுனாமி போலத் தாக்கியது. இதில் பல வீடுகள் அடித்து செல்லப்பட்டன.

தெருவில் நடந்து சென்றோரை வெள்ளம் இழுத்து சென்றது. சாலைகளில் சென்று கொண்டிருந்த கார்களையும் அதில் இருந்தவர்களோடு இழுத்து சென்றது.

4 மணி நேரம் இந்த வெள்ள தாக்குதல் நீடித்தது. இதில் சிக்கி 19 பேர் பலியானார்கள். 200 இற்கும் மேற்பட்டவர்கள் மீட்கப்பட்டனர். 72 பேரை காணவில்லை. அவர்களைத் தேடும் பணியில் ராணுவத்தினரும், மீட்புப் படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

வெள்ளம் குறித்த பெடரல் கட்சி எம்.பி. இயான் மேக் பார்லன் கூறும்போது, நான் 20 வருடமாக இங்கு வசித்து வருகிறேன். இந்தப் பகுதியில் இதுவரை இது போன்ற வெள்ளத்தைப் பார்த்தது இல்லை. வெள்ளம் பேரழிவை ஏற்படுத்திவிட்டது என்றார்



அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் ஜனநாயகக் கட்சி எம்.பி., கேப்ரியல்கிப்போர்டு மீது இளைஞன் கண்மூடித் தனமாக சுட்டதில் பலியானவர்களுக்கு வெள்ளை மாளிகையில் நடந்த இரங்கல் கூட்டத்தில் அதிபர் ஒபாமா, அவரது மனைவி மிச்செல் ஒபாமா ஆகியோர் கலந்து கொண்டனர்

# சர்வதேச நிதிநெருக்கடியைத் தீர்க்க அமெரிக்கா, பிரான்ஸ் கூட்டிணைவு

(வொஷிங்டன் )

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் , பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசியும் சர்வதேச நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதில் ஜி-8 மற்றும் ஜி-20 கூட்டமைப்புகளின் பங்களிப்புக் குறித்து ஆலோசித்தனர்.

ஜி-8 மற்றும் ஜி-20 சர்வதேச கூட்டமைப்புகளின் தலைமைப் பொறுப்பை பிரான்ஸ் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது. இதனை ஒட்டி இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. சந்திப்புக்குப் பிறகு வெள்ளை மாளிகையில் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்த ஜனாதிபதி ஒபாமா, அமெரிக்காவும் - பிரான்சும் கூட்டாக இணைந்து சர்வதேச நிதி நெருக்கடியைச் சமாளிப்பதென முடிவெடுத்துள்ளதாகத் தெரிவித்தார்

# தலிபான் அமைப்பிற்கு நெருக்கமாக நவாஸ் ஷெரீப் செயற்படுகின்றார்

## முஷாரப் குற்றச்சாட்டு

(லண்டன்)

தலிபான் அமைப்பிற்கு நெருக்கமாக, பாகிஸ்தானின் எதிர்க்கட்சித் தலைவர் நவாஸ் ஷெரீப் உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி முஷாரப் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் ஜனநாயக அரசு ஏற்பட்டதும் வழக்குகளை சந்திக்கப் பயந்து, லண்டனில் குடியேறினார் முஷாரப். அங்கிருந்தபடி சமீபத்தில் பாகிஸ்தானில் கட்சியைத் தொடங்கினார்.

விரைவில் நாடு திரும்பப் போவதாகக் கூறி வரும் முஷாரப், வொஷிங்டனில் பொறின் பொலிசி என்ற பத்திரிகைக்கு பேட்டி அளித்தார்.

அதில், பாகிஸ்தான் மக்கள் இப்போது நவாஸ் ஷெரீபின் முஸ்லிம் லீக், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் கூட்டணி ஆட்சியில் சிக்கித் தவிக்கின்றனர்.

ஒருவர் முடிவை அடுத்தவர் தடுப்பதால் அரசு இயந்திரம் செயல்படவில்லை. தலிபான் அமைப்புக்கு நெருக்கமாக நவாஸ் ஷெரீப் இருக்கிறார். மறுபக்கம், மதத் தலைவர்களிடம் ஆதரவு திரட்டுகிறார் என்றார்.

# பாதுகாப்புத்துறை தொடர்பாக அமெரிக்க - சீனா பேச்சுவார்த்தை

பாதுகாப்புத் துறை சம்பந்தமான உயர்மட்ட அளவிலான பேச்சுவார்த்தையை அமெரிக்காவும், சீனாவும் தொடங்கியுள்ளன.

அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் ரொபர்ட் கேட்ஸும், சீன பாதுகாப்புத் துறை அமைச்சர் லியாங் குவாங லியும் இந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளனர்.




இருதரப்பு இராணுவ உறவை மேம்படுத்தும் முயற்சிகள் குறித்தும், சீனாவின் இராணுவ நவீனமயமாக்கல் தொடர்பான அமெரிக்காவின் கவலை குறித்தும் இந்தப் பேச்சுவார்த்தையின் போது விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சீனாவின் மத்திய இராணுவ ஆணையத்தின் தலைமையகத்துக்கு வந்த ரொபர்ட் கேட்ஸை லியாங் வரவேற்றார்.

ஓர் ஆண்டு இடைவெளிக்குப் பிறகு இவ்விரு நாடுகளும் இந்தப் பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது

# அமெரிக்க பெண் எம்.பியைச் சுட்டவர் முன்கூட்டியே திட்டத்தை தயாரித்தவராம்

(வொஷிங்டன்)

அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் ஜனநாயகக் கட்சி எம்.பி., கேப்ரியல் கிப்போர்டு மீது கண் மூடித்தனமாகச் சுட்ட இளைஞன் ஜேர்டு லீலானர் (22) மீது பொலிஸார், ஐந்து குற்றச்சாட்டுகளைச் சுமத்தி நேற்று முன் தினம் பீனிக்ஸ் நகர் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.



இந் நிலையில், அவனது வீட்டில் இருந்து பொலிஸார் கைப்பற்றிய ஆவணங்களிலிருந்து, அவன் இந்தத் தாக்குதலுக்கு ஏற்கனவே திட்டமிட்டுள்ளதும், அவன் வலதுசாரி பயங்கரவாதியாக இருக்கக் கூடும் என்பதும் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் டக்சான் நகரில் உள்ள வணிக வளாகத்தில் இரு நாட்களுக்கு முன் நடக்க இருந்த கூட்டம் ஒன்றுக்காக வந்திருந்த ஜனநாயகக் கட்சி எம்.பி., கபிரியேல் கிப்போர்டு மீது, ஜேர்டு லீலானர் கண் மூடித்தனமாகச் சுட்டதில், அவரது தலையில் குண்டு பாய்ந்து ஆபத்துத்தான நிலையில் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவத்தில் நீதிபதி, பெண் குழந்தை, எம்.பி.யின் உதவியாளர் உட்பட ஆறு பேர் பலியாகினர். 14 பேர் காயம் அடைந்தனர். சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டலானரிடம் பொலிஸார் தொடர்நது விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவன் மீது, கொலை செய்ததற்காக தனித்தனியாக ஐந்து குற்றங்கள் சுமத்தப்பட்டு நேற்று முன்தினம் பீனிக்ஸ் நகர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டான்.

# மதகுருவின் தூண்டுதலாலேயே ஆளுநரைச் சுட்டுக்கொன்றேன்

## சரணடைந்த பாதுகாவலர் தகவல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் ஆளுநர் கொலை செய்யப்பட்ட வழக்கில கைது செய்யப்பட்ட பிரதமரின் பாதுகாவலர் மதகு ஒருவரின் தூண்டுதல் காரணமாகவே இக் கொலையைச் செய்ததாக வாக்கு மூலம் கொடுத்துள்ளார்.


பாகிஸ்தான் பஞ்சாப் மாகாண ஆளுநராக இருந்த சல்மான்தீர் (66) இஸ்லாமாபாத்தில் பாதுகாவலரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து அவரைச் சுட்ட பாதுகாவலர் பொலிஸில் சரண் அடைந்தார்.

இதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார். அவரது பெயர் மும்தாகுவாத்ரி (26). இவர் பிரதமர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்புத் தரும் படைப்பிரிவில் பாதுகாவலராகப் பணி புரிந்து வருகிறார்.

இஸ்லாமாபாத் வருகை தந்த சர்மான் தீருக்கு பாதுகாவலராக ஆளுநர் சென்றிருந்தார். தீர் மததுவேஷசட்டத்துக்கு எதிராக செயல்பட்டதாகவும், எனவே, அவரைக் கொலை செய்யும் படி ராவல்பிண்டியை சேர்ந்த மதகுரு தன்னை தூணடி விட்டதாகவும் தனது வாக்கு மூலத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

# தி.மு.க அரசு இருக்கும் வரைக்கும் வறியோர் இருப்பர் என்பதே உண்மை

## விஜயகாந்த் தெரிவிப்பு



ஏழைகள் இருக்கும்வரை இலவசங்கள் தொடரும் என்கிறார் முதல்வர் கருணாநிதி. ஆனால் தி.மு.க அரசு இருக்கும் வரை ஏழைகள் இருப்பார்கள் என்பதுதான் உண்மை என மக்கள் உரிமை மீட்பு மாநாடு என்ற பெயரில் தே.மு.தி.க சேலத்தில் நடத்திய மாநாட்டில் அக்கட்சியின் தலைவரும் நடிகருமான விஜயகாந்த் கலந்துகொண்டு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது -

ஊழல் இருப்பதால்தான் வறுமை நீடிக்கிறது. எனவே வறுமையை ஒழிக்க வேண்டும் என்றால் ஊழலை ஒழிக்க வேண்டும். அதைத்தான் நாங்கள் சொல்கிறோம்.

கருணாநிதி அரசு போடும் திட்டங்களின் பலன் மக்களுக்கு சென்று சேருவதைப் போல் தெரியும். ஆனால் கடைசியில் அதன் பலன் முழுவதும் கருணாநிதி குடும்பத்துக்குத் தான் சென்று சேருகிறது. இலவச தொலைக் காட்சிப் பெட்டி கொடுத்தோம் என்கிறார். ஆனால் அந்த டிவிகளுக்கு கொடுத்த கேபிள் இணைப்புகள் மூலம் யாருக்குப் பலன் கிடைத்தது?

அம்பேத்கர், கக்கன், ஜெகஜீவன்ராம் போன்ற தலைவர்களால் அந்தச் சமுதாயத்துக்கு பெருமை கிடைத்தது. ஆனால் ஊழல் செய்தவர்களை தலித் என்று கூறிக் காப்பாற்ற முயற்சிக்கிறார் கருணாநிதி.

மனுநீதியை மறுபிறவி எடுக்க விடமாட்டோம் என்கிறார் கருணாநிதி. உண்மையில் கருணாநிதியின் குடும்ப நீதிதான் இன்று மனு நீதியைப் போல் பிறவி எடுத்துள்ளது.

அந்த மனு தர்மத்தைத்தான் இன்று ஒழிக்க வேண்டும். இளைஞர்களுக்கு வேலை கிடைத்தால்தான் மகிழ்ச்சி அடைவேன் என்கிறார்.

ஆனால் 5 முறை முதல்வராக இருந்தபோது ஏன் இதைச் செய்ய வில்லை? தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. குற்றச் செயல்களைத் தடுக்க வேண்டிய காவல்துறை இன்று மற்றக் கட்சிக்காரனை வேவு பார்க்கும் வேலையைச் செய்கிறது. எனது தொலைபேசி கூட ஒட்டுக்கேட்கப்படுகிறது.

சட்டம், ஒழுங்கு சீரழிந்து பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் கூட படுகொலை செய்யப்படும் அவல நிலை உள்ளது. காவல்துறையின் இந்த ஆட்டம் வெறும் 4 மாதங்கள் மட்டுமே. காவல்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் விரைவிலேயே மாற்றி அமைக்கப்படும்.

ஒரு முருங்கைக்காய் 11 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இது குறித்துக் கேட்டால் ஒரு கிலோ அரிசி 1 ரூபாய்க்குக் கொடுக்கிறோம் என்கிறார். இவர்கள் தரும் அரிசி கால்நடைகளுக்கும் கடத்தல் காரர்களுக்கும்தான் பயன்படுகிறது.

மாறி மாறிப் பேசுவதில் கருணாநிதி வல்லவர். முன்பு வெறும் மஞ்சள் பையைத் தூக்கிக் கொண்டு சென்னைக்கு வந்தவன் நான் என்றார். இப்போது கிராமத்தில் திருடர்கள் கொள்ளையடிக்கும் அளவுக்கு வசதி உடைய வீட்டில்தான் பிறந்தேன் என்கிறார்.

ஊழலுக்கு நான் நெருப்பு என்கிறார். உண்மையில், ஊழலுக்கு நான் பொறுப்பு என்றுதான் கூறியிருக்க வேண்டும். காமராஜர் கல்வி கொடுத்தார். எம்.ஜி.ஆர். சத்துணவு கொடுத்தார். கருணாநிதியோ ஊழலை மட்டுமே செய்கிறார். தமிழர்களின் உரிமையைக் கடு களவும் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்கிறார். ஆமாம் கடுகளவு அல்ல கடலளவுதான் விட்டுக் கொடுப்பார். கச்சதீவு, இலங்கைத் தமிழர் படுகொலை என பல உதாரணங்களைச் சொல்லலாம் என்று பேசினார்.

# நகைச்சுவை நடிகை சோபனா தற்கொலை



பிரபல தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகை சோபனா சென்னையில் தற்கொலை செய்து கொண்டார். இச் சம்பவம் குறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

32 வயதான சோபனா, தொலைக் காட்சி நிகழ்ச்சிகளிலும், சில்லுன்னு ஒரு காதல், சிறுத்தை உள்ளிட்ட ஏராளமான தமிழ்த் திரைப்படங்களில் நகைச்சுவை வேடங்களில் நடித்துள்ளார்.

15 வயதில் நடிக்கத் தொடங்கிய சோபனா, இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொலைக்காட்சி மற்றும் திரைப்பட நிகழ்ச்சிகளில் நடித்துள்ளார்.

சோபனாவின் தாயார் ராணியும் திரைப்படங்களில் துணை நடிகையாக நடித்தவர். வைரம் உள்பட பல படங்களில் துணை நடிகையாக நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெள்ள நிவாரணம் வழங்க வலியுறுத்தி சந்திரபாபு நாயுடு மாட்டுவண்டி யாத்திரை



(கோதாவரி)

ஆந்திர மாநிலத்தின் கோதாவரி மாவட்ட விவசாயிகளுக்கு உடனடியாக வெள்ள நிவாரணம் வழங்கவேண்டுமெனக் கோரி சந்திரபாபு நாயுடு மாட்டுவண்டி யாத்திரையை மேற்கொண்டுள்ளார்.


கடலோர ஆந்திராவில் பெய்த பலத்த மழையால் பயிர்கள் நாசமாயின. இதில் மேற்கு கோதாவரி, கிழக்கு கோதாவரி, குண்டூர், கிருஷ்ணா, மாவட்ட விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்தனர். அவர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கக் கோரி ஜெகன்மோகன் ரெட்டி, சந்திரபாபு நாயுடு ஆகியோர் போராட்டம் நடத்தினார்கள்.

இதையடுத்து ஆந்திர அரசு நஷ்டஈடு வழங்கியது. ஆனால் ஆந்திர அரசு குறைந்த அளவே நஷ்டஈடு வழங்கியது என்று குற்றம்சாட்டிய சந்திரபாபு நாயுடு, இதைக் கண்டித்து கால வரையறையற்ற உண்ணாவிரதம் இருந்தார். சந்திரபாபு நாயுடு வின் உண்ணாவிரதம் பலன் அளிக்கவில்லை.

இந்நிலையில் சந்திரபாபு நாயுடு மேற்கு கோதாவரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மாநில அரசு உடனடியாக வெள்ள நிவாரணம் வழங்கக்கோரி மாட்டு வண்டி யாத்திரை மேற்கொண்டார். அப்போது அவர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஆறுதல் கூறினார். மேலும் மாநில அரசு விவசாயிகளுக்கு நஷ்டஈடு தராமல் இழுத்தடிப்பதைக் கண்டித்துப் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்துள்ளது. இதில் காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கும் தொடர்பு உண்டு. அதை விசாரணை அதிகாரிகள் மூடி மறைக்கிறார்கள். இது பற்றி மாநிலம் முழுவதும் பிரசாரம் செய்வேன். விவசாயிகளுக்குத் துரோகம் இழைத்து வரும் காங்கிரஸ் அரசுக்கு ஆந்திர மக்கள் பாடம் புகட்டுவார்கள் என்றார்.

# தேஜஸ் போர் விமானம் விமானப்படையிடம் கையளிப்பு



(புதுடெல்லி)

உள்நாட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட தேஜஸ் போர் விமானத்தை விமானப்படையில் சேர்ப்பதற்கான அனுமதி சான்றிதழ் நேற்றுமுன்தினம் அளிக்கப்பட்டது.

வெளிநாடுகளிலிருந்து வாங்கப்பட்ட போர்விமானங்களை இந்திய விமானப்படை பயன்படுத்தி வருகிறது. இந்திய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போர் விமானம் தயாரிக்க மத்திய அரசு முடிவு செய்தது.

இதற்காக, இலகு ரக போர் விமானத்தை வடிவமைத்து தயாரிக்கும் முயற்சியை இந்திய விஞ்ஞானிகள் கடந்த 1990 ஆம் ஆண்டு தொடங்கினர்.

11 ஆண்டு ஆராய்ச்சியில் தயாரிக்கப்பட்ட இலகு ரக போர் விமானம் கடந்த 2001 ஜனவரி 4 ஆம் திகதி முதல் முறையாக வானில் பறந்தது. அந்த ரக விமானத்துக்கு தேஜஸ் என்று பெயரிடப்பட்டது.

கடந்த 10 ஆண்டுகளில் 1452 முறை வானில் பறக்கச் செய்து பல்வேறு சோதனை நடத்தப்பட்டது. இதன் அடிப்படையில், தேஜஸ் போர் விமானத்தை விஞ்ஞானிகள் மேம்படுத்தினர். தேஜஸ் போர் விமானத்தை பயன்படுத்த இந்திய விமானப் படைக்கு அனுமதிச் சான்றிதழ் வழங்கும் விழா பெங்களூர் எச்.ஏ.எல். விமான நிலையத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இந்த விழாவில், அனுமதிச் சான்றிதழை விமானப் படைத் தலைமைத் தளபதி பி.வி.நாயக்கிடம் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி வழங்கினார்.

முதல் கட்டமாக 40 தேஜஸ் போர் விமானங்கள் தயாரிக்கப்பட உள்ளது. இந்த விமானங்கள், தமிழகத்தில் கோவை சூலூரில் உள்ள விமானப் படைத் தளத்தில் நிறுத்தப்பட உள்ளன.




# தி.மு.க, காங்கிரஸ் கூட்டணி தொடருமெனத் தெரிவிப்பு

(சென்னை)

தமிழகத்தில் தி.மு.க காங்கிரஸ் கூட்டணி தொடரும் என, மத்திய நாடாளுமன்ற விவகாரத்துறை இணையமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார்.

சிதம்பரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய இணையமைச்சர் நாராயணசாமி,

தமிழ்நாட்டிலும், புதுவையிலும் காங்கிரஸ் - தி.மு.க கூட்டணி பல்வேறு சீரிய மக்கள் நலத்திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. ஆட்சியை பிடிக்க முடியாத விரத்தியில் உள்ள பா.ஜ.க 2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரம் குறித்து பொய் பிரச்சாரம் செய்து வருகிறது.

இது மக்கள் மத்தியில் எடுபடாது. 2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பான தணிக்கைத்துறையின் அறிக்கை ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. தவறானது.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் சுமுகமாக நடத்துவது குறித்து நடைபெற்ற கூட்டத்தில் பா.ஜ.க தலைவர்கள் அத்வானி, சுஷ்மா சுவராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பல்வேறு வழிமுறைகளைத் தெரிவித்துள்ளனர். எனவே நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் சுமுகமாக நடைபெறும் என்றார்.

# நாடாளுமன்றத்தைத் தவறான முறையில் அமைச்சர் அதாவுல்லா வழி நடத்தினாராம்

## ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம். அதாவுல்லாவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

அமைச்சர் அதாவுல்லா நாடாளுமன்றத்தைத் தவறாக வழிநடத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

நுகேகொடையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறும் என அமைச்சர் நாடாளுமன்றில் உறுதியளித்ததாகவும், இந்த வாக்குறுதி மீறப்பட்டுள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் அரசாங்கம் போலியான வாக்குறுதி ஒன்றை அளித்ததாகவும், தற்போது மாநகரசபைகளுக்கான தேர்தல்களை அரசாங்கம் ஒத்தி வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# அதிகளவு அடிப்படை உரிமைமீறல் மனுக்கள் பொலிஸாருக்கு எதிராகவே தாக்கல்

(கொழும்பு)

பொலிஸாருக்கு எதிராகவே அதிகளவு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2010ஆம் ஆண்டில் 669 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதாகவும், இதில் அதிகமானவை பொலிஸ் திணைக்களத்திற்கு எதிரானவை எனவும் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறெனினும், 2009ஆம் ஆண்டை விடவும் கடந்த ஆண்டில் அடிப்படை உரிமை மீறல் சம்பவங்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

2009ஆம் ஆண்டில் 1010 அடிப்படை உரிமை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. உச்ச நீதிமன்றின் புள்ளி விபரத் தகவல்களின் அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

# பிக்குகளின் ஆதரவைப் பெறுவதற்கு சஜித் பணம் வழங்குகின்றாராம்

## ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச பணம் கொடுத்து பௌத்த பிக்குகளின் ஆதரவினைப் பெற்றுக் கொள்ள முயற்சி மேற்கொண்டு வருவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஆலோசகர் உதய கம்மன்பில மஸ்கெலியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் ஜனாதிபதியாகும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சஜித் பிரேமதாச, பௌத்த விஹாரைளுக்குப் பணம் கொடுத்து ஆதரவு திரட்டி வருகின்றார்.

பௌத்த விகாரைகளின் ஆதரவினைத் திரட்டும் நோக்கில் சஜித் பிரேமதாச, விகாரைகளுக்கு தலா 50,000 ரூபாவினை வழங்கி வருகின்றார்.

எவ்வாறெனினும் விகாரைகளுக்கும் பணம் வழங்குவதன் மூலம் பிக்குகளின் ஆதரவினை திரட்ட முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்குத் திட்டம்

(நமது நிருபர்)

சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் ஓய்வு பெற்ற பின் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுவருவதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது

சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவற்றுக்கான தீர்வுகளைக் காணுமுகமாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் தலைமையில் நியமிக்கப்பட்டு, அக்குழுவின் சிபார்சுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது விவசாய ஆராய்ச்சி அதிகாரிகள் முகங்கொடுத்து வந்த பல்வேறு பிரச்சினை களுக்கும் தீர்வுகள் காணப்பட் டுள்ளது.

சமுர்த்தித்திட்டத்தின் கீழ் சுமார் 15 இலட்சம் பேர் உதவி பெற்று வருகின்றனர். இந்நிலையில் அவர்களின் சமூகமேம்பாட்டையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்காக அரசவை சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகிறதெனவும் அவர் தெரிவித்தார். (வி)

# உதவித்தொகை அதிகரிக்கப்படும்

(நமது நிருபர்)

மாற்று வலுவுள்ளோருக்கான உதவித்தொகையைப் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளதாக சமூக சேவை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது இந்த உதவித்தொகையைப் பெறும் மாற்று வலுவுள்ளோர் தொகை 2300 ஆக இருப்பதாகவும், சமூகசேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவின் பணிப்பின் பேரில் அத்தொகை 11 ஆயிரம் வரையாக அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை உடல் வலுவிழந்தவர்கள் பொது இடங்கள், அரசகட்டடங்கள் உட்பட அனைத்து இடங்களுக்கும் சென்று வருவதற்கான வசதிகள் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இத்திட்டம் 2014ஆம் ஆண்டு பூர்த்தியடையும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (வி)

# மீண்டுமொரு கொரிய மொழிப் பரீட்சை நடைபெறமாட்டாதெனத் தெரிவிப்பு

(கொழும்பு)



எதிர்வரும் ஏப்ரல் மாதம் மீண்டுமொரு கொரிய மொழியிலான பரீட்சை நடைபெறும் என்ற தகவல் பொய்யானது என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரியாவிற்கு வேலைவாய்ப்பைத் தேடிச்செல்வதற்கு வசதியாக இந்தப் பரீட்சை நடத்தப்படவுள்ளது என வெளியான தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை.

இவ்வாறான தகவல்களினால் சில பேர் கொரிய மொழி வகுப்பிற்குச் சென்று கற்றவருவது தேவையற்றதுடன் நேரத்தையும் வீணடிக்கும் செயலாகும். அத்துடன் இவ்வாறான வதந்திகள் தொடர்பாக மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படவேண்டும்.

இவ்வாறான வதந்திகள் மாத்தளை, இரத்தினபுரம், தங்காலை போன்ற இடங்களில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்ட கொரிய மொழிப் பரீட்சையில் 5 ஆயிரத்து 302 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்கள் கொரிய நாட்டிற்கு அனுப்பப்படவுள்ளனர்.

மேலும் இது தொடர்பாக மேலதிக தகவல்களை 1989 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு வருவதற்கு மேலும் 4 நுழைவு இடங்கள்

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் இலங்கைக்குள் நுழைவதற்கான முக்கிய இடமாக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் இருந்து வருகின்ற போதிலும், இரத்மலானை மற்றும் பலாலி ஆகிய விமான நிலையங்கள் மற்றும் கொழும்பு, காலி, திருமலை, தலைமன்னார் ஆகிய நான்கு துறைமுகங்களும் இலங்கைக்குள் நுழைய அதிகாரபூர்வமாகப் பயன்படுத்தக் கூடியவையாக உள்ளன. இந்த 3 விமான நிலையங்கள் மற்றும் 4 துறைமுகங்கள் தவிர மேலும் நான்கு நுழைவு இடங்களை ஜனாதிபதி மஹிந்த அறிவித்துள்ளதாக தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீனாவின் உதவியுடன் திறக்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகம், நுரைச்சோலை, காங்கேசன்துறை மற்றும் அம்பாறையிலுள்ள ஒலுவில் ஆகியவையே தற்போது புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளன. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினர் நுரைச்சோலையில் புதிதாக அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளதாகவும் தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

# மூன்று இலங்கையர்களுக்கு எஸ்தோனியாவில் அடைக்கலம்

(கொழும்பு)

எஸ்தோனியாவில் கடந்த 2010ஆம் ஆண்டு 33 பேர் அரசியல் தஞ்சம் கோரியதாகவும், இவர்களில் இலங்கையர்களும் அடங்குவதா கவும் அந்த நாட்டின் அரசு அறிவித்துள்ளது.

33 பேரில் 17 பேருக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டதாகவும் அவர்களில் மூவர் இலங்கையர் எனவும் கூறப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டில் பல நாடுகளைச் சேர்ந்த மொத்தம் 40 பேர் அரசியல் தஞ்சம் கோரிய போதிலும் மூவருக்கு மட்டுமே அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டது.



யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியின் கடந்த ஆண்டிற்கான கல்வி மற்றும் விளையாட்டுக்களில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமை உரையாற்றுவதையும், பிரதம விருந்தினர் ஏ.ஜோசப், இலங்கை யூனியன் வங்கியின் பிரதி முகாமையாளர் அலெக்ஸ் லோவல் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (பா)

# எங்கள் வழக்கை விசாரியுங்கள்; கோரிக்கை முன்வைத்து உண்ணாவிரதம்

## இந்திய அகதி முகாமில் தமிழ் அகதிகள் முஸ்தீபு



(புதுடெல்லி)

பூந்தமல்லி இலங்கைத் தமிழர் விசேட அகதி முகாமில் உள்ள இலங்கைத் தமிழ் அகதி (வயது - 40) தங்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு ஜன வரி 15 முதல் உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளார். அதற்கு அனுமதி கேட்டு அவர் உயரதிகாரிகளிடம் மனுச் செய்துள்ளார். தங்களுக்கு தரப்படும் 40 ரூபா படியை 70 ரூபாவாக உயர்த்தும்படியும் அகதிகள் கேட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக தாஸில்தாரிடம் கையளிக்கப்பட்ட மனு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தாஸில்தாரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து கிடைக்கும் தகவல்களின்படி, முத்தண்ணா மனுவை பூந்தமல்லி தாஸில்தார் எஸ்.பத்மாவதியிடம் கையளித்துள்ளார். ஜனவரி 15 முதல் முகாமில் உண்ணாவிரதம் இருக்க அனுமதி தருமாறு முத்தண்ணா மனுவில் கோரியிருந்தார். விசேட நீதிமன்றங்களில் கிடப்பில் இருக்கும் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தப்படாவிட்டால் உண்ணாவிரதம் இருக்கப்போவ தாக அவர் அந்த மனுவில் சுட்டிக் காட்டியிருந்தார்.

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர் விசேட அகதி முகாம்கள் இரண்டு உள்ளன. ஒன்று பூந்தமல்லியிலும் மற்றது செங்கல்பட்டியிலும் உள்ளது. இப்பொழுது ஒன்பது அகதிகளே பூந்தமல்லி முகாமில் உள்ளனர். ஏனைய ஒன்பது அகதிகள் நாகையில் உள்ள உறவினர்களின் வீடுகளில் தங்குவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. விசேட அகதி முகாம்களைத் தாங்கள் ஒரு சிறைச்சாலையாகக் கருது வதாகத் தெரிவித்துள்ளனர். பூந்தமல்லி அகதிகள் வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளனர்.

அகதிகளுக்கு தலா 45 ரூபா மாநில அரசினால் வழங்கப்படுகிறது. இக்கொடுப்பனவு இரண்டு கிழமைகளுக்கு ஒரு முறை தரப்படுவது வழக்கம். படி போதாதென்றும் அதை 70 ரூபாவாக உயர்த்தும்படி அகதிகள் கடந்த சில மாதங்களாக உள்ளிருப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஜனவரி 1 ஆம் திகதி அதிகரிக்கப்பட்ட படியை விநியோகிக்க வந்த சமயம், படியை உயர்த்துமாறு கோரி ஏற்க மறுத்தனர்.

தாஸில்தார் எஸ்.பத்மாவதி தெரிவிக்கையில், முகாமில் உள்ளவர்கள் படியைப் பெற மறுத்தார்கள். பலமுறை கேட்டதின் பேரில் வெள்ளியன்று படியை வாங்கினார்கள். முகாமைவிட்டு வெளியில் சென்று மளிகைச் சாமான்களையும் ஏனைய பொருட்களையும் கொள்வனவு செய்ய அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. அத்தியாவசியப் பொருட்களை வெளியில் வாங்கிக் கொடுப்பதற்கு ஓர் அதிகாரியை நியமித்துள்ளோம். படியை உயர்த்துமாறு அவர் வழக்கில் மனு மாவட்ட ஆட்சி அலுவலகம் ஊடாக மாநில அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றார்.

# குளவியால் அடித்தார் மகன்; தந்தை அந்த இடத்திலேயே பலி

## தெற்கில் நடந்த கொடூரம்

(கொழும்பு)

அம்பியின் குளவிக்கல்லால் தந்தையின் தலையில் அடித்து கொலை செய்துவிட்டு மகன் பொலிஸில் சரணடைந்த சம்பவமொன்று நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிற்பகல் பன்வில பொலிஸ் பிரதேசத்துக்கு உட்பட்ட மடுல்கலை கல்கொட கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கந்தையா (வயது - 64) என்பவரே கொலலப்பட்டவராவார். வீட்டில் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் அதிகரிக்கவே குளவிக்கல்லை எடுத்து வந்த மகன் தந்தையின் தலையில் பலமாகத் தாக்கி கொலை செய்துள்ளார் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவத்தை அடுத்து மகன் பன்வில பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். உயிரிழந்தவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் கடும் மழை; ஆயிரக்கணக்கில் மக்கள் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தற்போது பெய்த கன மழையினால் 8 ஆயிரத்து 97 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 867 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் 5 ஆயிரத்து 394 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 400 தமிழ்மக்களும், 940 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 384 சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் செட்டிக்குளம் பிரதேசத்தில் 740 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 383 பேரும், நெடுங்கேணிப் பிரதேசத்தில் 923 குடும்பங்களைச் சேர்ந்தத 2 ஆயிரத்து 700 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட 6 தற்காலிக வீடுகளும் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், 4ஆயிரம் ஏக்கர் நெல் வயல்களும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (39)

### வெள்ளப்பாதிப்புக்குள்ளான...

ஆகியோர் இலங்கைக்கான இந்தியத் தூதுவரை நேற்றுச் சந்தித்தனர். இச்சந்திப்பில் நிலைமைகளை கேட்டறிந்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளையும் மருத்துவ உதவிகளையும் விரைவில் ஏற்படுத்தி தருவதற்கு இந்தியா நடவடிக்கை எடுக்குமென உறுதியளித்துள்ளார். மிக விரைவில் இந்த நிவாரண பொருட்கள் கிழக்கில் விநியோகிக்கப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்தார்.

### சட்டக் கல்லூரி...

தலைமையிலான தனி நபர் ஆணையம் சட்டக் கல்லூரி வளாகத்தில் ஒன்றரை மணி நேரம் விசாரணையை நடத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

விசாரணையின் போது புகார்தாரர் டி.எம். துஷார ஜெயரத்ன விசாரணைக் குழுமுன் நேரில் ஆஜராகி, இந்த விசாரணை தொடர்பாக தனது ஆட்சேபனையை முன்வைத்தார். தற்போது கல்லூரி நிர்வாகத்தால் அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவுக்கு இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரிக்க அதிகாரம் இல்லை என்று அவர் ஆட்சேபம் தெரிவித்தார்.

சட்டக்கல்லூரியின் வினாத்தாள்கள் சட்டவிரோதமாக வெளியானது என்றும், ஜனாதிபதியின் மகன் நாமல் ராஜபக்ஷ குளிரூட்டப்பட்ட அறையில் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டார் என்றும் அவர் புகார் அளித்திருந்தார்.

இந்த இரு புகார்களும் விசாரணைக்கு ஏற்கப்பட்டுள்ளன. ஆனால் புகார் செய்ததன் காரணமாக தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஜெயரத்ன கூறிய குற்றச்சாட்டை பொலிஸாரிடம் முறையிடுமாறு ஆணையம் அறிவுறுத்தியது.

இந்தப் புகார் குறித்தும் விசாரணை நடைமுறைகள் குறித்தும் மறுதரப்புக் கருத்துக்கள் கிடைக்கப் பெறவில்லை.

### தேர்தலில் கூட்டு.....

வெளியிட்டார்

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியாக யானைச் சின்னத்தில் போட்டி யிடவுள்ளோம். சில தேர்தல் களில் நாங்கள் பெற்ற அனுப வம் மற்றும் ஏனைய விடயங்கள் மற்றும் கட்சி உறுப்பினர்களின் வேண்டுகோள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு இந்த முடிவை எடுத்துள்ளோம்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசியல் குழுக்கள் மற்றும் கட்சிகள் எம்முடன் இணைந்து போட்டியிட விரும்பினால், அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமை பெறவேண்டும். காரணம் கடந்த காலங்களில் நாங்கள் இதன் மூலம் சட்ட ரீதியான சிக்கல்களுக்கு முகம் கொடுத்தோம்.

அதனால் வடக்கு, கிழக்கு உட்பட்ட மாகாணங்களில் நாம் ஐக்கிய தேசியக் கட்சியாகப் போட்டியிடவுள்ளோம். கட்சியில் 40 வீதம் இளையவர்களை களமிறக்கவுள்ளோம். மகளிர் பிரதிநிதித்துவம் தொடர்பில் முடிவுசெய்யவில்லை.

எனினும், அது தொடர்பில் சில மகளிர் அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி கலந்துரையாடி வருகிறோம். இந்தத் தேர்தலில் புதிய முகங்கள் பலவற்றை நாங்கள் அறிமுகம் செய்யவுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

# கிழக்கில் தொடரும் அடை மழை; போக்குவரத்துச் சேவைகள் நிறுத்தம்

(மன்னார்)

மன்னாரில் இருந்து கிழக்கு மாகாணத்திற்கான அரச பேருந்து சேவைகள் நேற்று முதல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரி விக்கப்படுகின்றது. கடந்த சில நாட்களாக கிழக்கு மாகாணத் தின் பல பகுதிகளிலும் ஏற்பட்டி ருக்கும் காலநிலை மாற்றத்தை அடுத்து அப்பகுதிகளில் கடும் மழை தொடர்ச்சியாகப் பெய்து வருகின்றது.

இந்நிலையில், கிழக்கு மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ள நிலை ஏற்பட்டு மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருப்பதோடு, பல்லாயிரக்கணக் கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். இதேவேளை, ஏற்பட்டிருக்கும் வெள்ள நிலை காரணமாக பல வீதிகள் நீரில் மூழ்கியிருப்பத னால் சீரான போக்குவரத்து சேவைகளிலும் பாரிய தடங்கல் ஏற்பட்டிருக்கின்றது.

இந்நிலையில், மன்னாரில் இருந்து மட்டக்களப்பு, கல் முனை, திருகோணமலை உள்ளிட்ட பல பகுதிகளுக்கான அரச போக்குவரத்துச் சேவை கள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவரு கின்றது. கிழக்கு மாகாணத்தின் சீரற்ற காலநிலை இயல்பு நிலைக்குத் திரும்பும் வரை இப்போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டிருக்கும் எனவும், அதன பின் வழமையான போக்குவரத்து இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, புத்த ளம் ஊடான மன்னார், கொழும்பு போக்குவரத்து வீதியும் நீரில் மூழ்கக்கூடிய நிலை ஏற்பட்டிரு ப்பதாகவும், அனுராதபுரம் மாவ ட்டத்திற்குட்பட்ட றம்பாவ பகுதிக்கூடாக நாச்சியாறு பெருக்கெடுத்து நீர் வெளியே றுவதாகவும், இதன் காரணமாக மன்னார், அனுராதபுரம், புத்த ளம், கொழும்பு பிரதான வீதியூ டான போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப்படலாம் என தெரிவிக்கப் படுகின்றது.

### மேகங்களால்.....

திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.எச். காரியவசம் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்றுக் காலை வெப்பநிலை 14 பாகை செல்சியஸாக இருந்தது. கொழும்பில் 24.8 பாகை செல்சியஸாகவும் இருந்தது. வழக்கமாக அதிக வெப்பநிலை நிலவும் யாழ்ப்பாணம், அநுராதபுரம் போன்ற பகுதிகளில் நேற்று வெப்பநிலை முறையே 25.8 மற்றும் 24.4 பாகை செல்சியஸாக இருந்தது. மன்னாரில் வெப்பநிலை 20 பாகையாகவும், கண்டியில் 20.9 பாகை செல்சியஸாகவும் இருந்தது.

இதேவேளை, இந்தியாவில் குளிரான காலநிலை எதிர்வரும் நாட்களிலும் நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்ததாக செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கர்நாடகா மாநிலத்தில் சில இடங்களில் 11 பாகை செல்சியஸ் அளவுக்கு வெப்பநிலை குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் 21 பாக்கை வெப்பநிலை நிலவுகிறது.

### வெள்ள நிவாரணப்...

மக்களுக்கான நிவாரணப் பணிகளில் அரச நிறுவனங்களினதும், முப்படைகளினதும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

### இராஜதந்திர...

செயலாளராக இருக்கும் றொமேஸ் ஜெயசிங்க ஜேர்மனிக்கான தூதுவராக அனுப்பப் படவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர்கள் ரஞ்சித் உயங்கொட சீனாவுக்கும், ஜெயந்த பலிப்பான டோகாவுக்கும் தூதுவர்களாக நியமிக் கப்படவுள்ளனர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளராக சீனாவில் உள்ள சிறிலங்கா தூதுவர் கருணாதிலக அமுனுகம நியமிக்கப்பட வுள்ளார்.

அதேவேளை அவுஸ்ரேலியா, ஜப்பான், பிரித்தானியா போன்ற நாடுகளுக்கும் புதிய தூதுவர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கை இராஜதந்திரிகள் சிறப்பாக செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு அதிகரித்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தாவாந்துறைப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.



# யாழ். நகர வர்த்தகர்களுக்கான வசதிகள் விரைவில் செய்து கொடுக்கப்படவுள்ளன

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு



(தொல்புரம்)

யாழ். நகர வர்த்தக நிலையங்களின் மீள்நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை அறவீடு (வரி) தை மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதுடன். வர்த்தகர்களுக்கான வசதிகள் பல செய்துகொடுக்கப்படவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட நகர வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பல்வேறு குறைபாடுகள் குறித்தும், வர்த்தக நிலையங்களுக்கு தற்போது மீள்நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வரி அறவீடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்கட்கிழமை மாலை யாழ். மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் கலந்துகொண்ட வர்த்தகர்களால் பின்வரும் விடயங்கள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

வர்த்தக நிலையங்களின் வாடகை அதிகரிப்பு, மாநகர சபையின் தீயணைக்கும் இயந்திரங்களை நவீனமயப்படுத்தல், சட்டபூர்வமற்ற அங்காடி வியாபாரிகளால் ஏற்படும் பாதிப்பு, வர்த்தக நிலையங்களின் பெயர் மாற்ற உரிமை, வர்த்தகர்களின் வாகன தரிப்பிடவசதி, நகரின் இரண்டு பெரிய கடைத்தொகுதிகளையும் இணைக்கும் பாலத்தின் மேலான கூரை அமைத்தல், வர்த்தக நிலையங்களின் வெளியிலிலுள்ள பொருட்களை உள்ளெடுப்பதால் ஏற்படும் வியாபார குறைவு, அங்காடி வியாபாரிகளைக் குறைத்தல், மலசலகூட வசதி உள்ளிட்ட கோரிக்கைகளை வர்த்தகர்கள் முன்வைத்தனர்.

இதன்போது தமது கருத்தை வெளியிட்ட அமைச்சர், மீள்நிர்ணயம் செய்யப்பட்ட வரி அதிகரிப்பு தை மாதத்திலிருந்து நடைமுறைக்கு வருமெனவும், கடை உரிமை பெயர்மாற்றம் தொடர்பான விபரங்களை மாநகரசபைக்கு கையளிக்குமாறு வர்த்தகர்களைக் கேட்டுக்கொண்ட அமைச்சர், வர்த்தகர்களுக்கான சேவை அதிகரிப்பு (தேவைப்பாடுகள்) தொடர்பான எழுத்துமூலமான விபரங்களைச் சமர்ப்பிக்கும்படியும், வாகன தரிப்பிடம் அமைப்பது தொடர்பாக மாநகரசபை சில ஆலோசனைகளைக் கொண்டுள்ளதாகவும், வர்த்தகர்கள் தமது ஆலோசனைகளையும் இது தொடர்பில் தெரிவிக்க முடியுமென்றும் கூறிய அமைச்சர், பெரிய கடைத்தொகுதிகளுக்கிடையில் செல்லும் பாலத்திற்கான கூரை போடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

இதேவேளை, ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக நகர வர்த்தக நிலையப் பகுதியில் முடிக்கப்படாமல் உள்ள வேலைகளை உடன் முடிக்க நடவடிக்கை எடுக்கும்படி ஊழியர்களை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மேற்படி நிகழ்வில் மாநகர சபையின் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மு.செ.சரவணபவ, முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, உதவி முதல்வர் றீகன், நகர வர்த்தகர்கள், மாநகரசபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (26)

# 70 வயது மூதாட்டி அடித்து கொலை; திருகோணமலையில் கொடூரம்!

(திருகோணமலை)

திருகோணமலை மத்திய வீதி உவர்மலை பிரதேசத்தை சேர்ந்த 70 வயதான பத்மதேவி சிறிஸ்கந்தராஜா என்ற பெண்மணி இனந்தெரியாத நபர்களால் நேற்று முன்தினமிரவு அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை திருகோணமலை தலைமையக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலம் பிரேத பரிசோதனைக்காக தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கு மாகாண உள்ளூராட்சி தேர்தல்; நியமனப் பத்திர தாக்கல் திகதியை நீடிக்குக

## பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் திகதியை நீடிக்குமாறு தேர்தல் ஆணையாளரிடமும் அரசாங்கத்திடமும் வேண்டுகோள் விடுப்பதாக உள்நாட்டு வர்த்தக மற்றும் கூட்டுறவு பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாகவே நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் திகதியை நீடிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீரவிடமும் இது தொடர்பாக தான் கூறியதாக பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூத் குறிப்பிட்டார்.

# மின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் பலி; மற்றொருவர் காயம்!

## மட்டு. ஓந்தாச்சிமடத்தில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஓந்தாச்சிமடம் பிரதேசத்தில் நேற்று மாலை மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்து களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டில் தொடரும் வெள்ளப் பாதிப்புகள் அரசின் நிவாரணத் திட்டங்கள் திருப்தியில்லை

## குற்றம் சுமத்துகிறது ஐ.தே.கட்சி



(கொழும்பு)

வெள்ளப் பாதிப்புக்குட்பட்ட மக்களுக்கான அரசின் மீட்பு நடவடிக்கைகளும் நிவாரண உதவித்திட்டங்களும் எந்த வகையிலும் திருப்தியானதாக அமையவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க செய்தியாளரிடம் பேசும்போதே மேற்கண்ட குற்றச்சாட்டை அரசு மீது சுமத்தினார்.

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நாளொன்றுக்கு உணவுக்கென வெறும் 75 ரூபாவே வழங்குகின்றது. இந்த அனர்த்தம் தொடர்பில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து திருப்தியடைய முடியவில்லை.

நாட்டில் அனர்த்தத்தால் 9 லட்சம் பேர் பாதிக்கப்பட்டும், அவர்களுக்கு நிவாரணம் வழங்க தொடர்புபடுத்துவதற்கு, அவர்களுக்கு உதவிகளை வழங்க, அமைச்சுகளுக்கு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள, எந்தவொரு வேலைத் திட்டத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

குறைந்தபட்சம், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க விசேட செயற்குழுவைக் கூட அரசாங்கம் அமைக்கவில்லை. பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இன்னும் பழைய சுற்றறிக்கையில் மூலமே உதவிகள் வழங்கப்படுகின்றன.

நாளொன்றுக்கு உணவுக்கென 75 ரூபா வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல்கட்ட உதவியாக உணவு மற்றும் மருந்து வசதிகள் கொடுக்கப்பட வேண்டும். அதற்கென பிரதேச செயலகங்களுக்கு அரசாங்கம் விசேட நிதியுதவியை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை என திஸ்ஸ அத்தநாயக்க இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

# ஆயரின் தாடியை வெட்டிய மூவர் கைது

## ஜேர்மனியில் சம்பவம்

ஆயரின் வாயில் துணியைத் திணித்த அவரது வெள்ளைத் தாடியை வெட்டிய குற்றத்திற்காக ஓர் இலங்கைப் பிரஜை உட்பட மூன்று பேர் மீது ஜேர்மனியில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஜேர்மன் நகரான படர்போர்ன் நீதிமன்றத்திலேயே வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சிரியா நாட்டவர் (வயது - 36) இலங்கைப் பிரஜை (வயது - 33) மற்றும் துருக்கிப் பிரஜை (வயது - 33) ஆகியோர் மீது கொலை முயற்சி, களவு மற்றும் தாக்குதல் ஆகிய குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஜுலியஸ் ஹனா ஐடின் என்ற வைதீக சிரிய கிறிஸ்தவ திருச்சபை ஆயரே தாக்கப்பட்டவராவார். ஆயர் வார்வேக் மடாலயத்தில் இருந்தபோதே அவர் வாயில் துணியைத் திணித்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

குற்றம் சுமத்தப்பட்ட மூவரும் பிராங்பேர்ட்டுக்கு கிழக்காக உள்ள லிவஸ்பேடின் நகரவாசிகளாவார்.

# எனக்கு அமெரிக்க...

பல்வேறு இரகசிய இராஜதந்திர தரவுகளை அசான்சே அம்பலப்படுத்தியிருந்தார்.

அசான்சே தற்போது பிரித்தானியாவில் தங்கியிருப் பதாகவும், நாடு கடத்தப்படு வதற்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த இரண்டு பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக அசான்சே மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அசான்சே தொடர்பான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் மற்றும் 8 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பெண்களுக்கு எதிராக பாலியல் வன்முறைகளில் ஈடுபடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என அசான்சே தெரிவித்துள்ளார்.

# கனடாவில் புதிய....

வழிகாட்டல் அமையலாம் என குடிவரவு மற்றும் அகதிகள் சபை கூறியுள்ளது.

இந்தப் புதிய கொள்கை பின்பற்றப்படுமிடத்து ஓன்லேடி, எம்.வி. சன்சீ ஆகிய கப்பல்களில் வந்தோருக்கு இது பாதகமாக அமையும். ஆனால், இந்தப் புதிய வழிகாட்டல் குறிப்பு சட்டரீதியான வலுவுடையதல்ல என மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர்.

பொதுப் பிரச்சினைகளைக் காரணமாகக் காட்டி கனடாவில் அகதி அந்தஸ்து கோருவதை ஏற்க முடியாது என குடிவரவு மற்றும் அகதிகள் சபை தெரிவித்துள்ளது. இந்தப் புதிய வழிகாட்டலை எதிர்த்து லோன்வல்ட்மன் என்ற சட்டத்தரணி பெடரல் நீதிமன்றில் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC
ஷாலோம்
SHALOM
வழங்கும் நற்செய்தி...!
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறித்த தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
வீடுகள் கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்
SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/357)
தொலைபேசி : 0217901798 - 0771044861
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஜனவரி 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.